விடுதலை வேள்வியில்

விஸ்வநாததாஸ்

செ.திவான்

Dr. Kosalram.A , DHMS
Consultant Homoeopath, Reg.No.331
Swarna Medical Hall Buildings
148, Trivandram Road, Palayamkottai-2

விடுதலை வேள்வியில் விஸ்வநாததாஸ்

வரலாற்றாசிரியர்

செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

சுகைனா பதிப்பகம்,

106 F/4A, திருவனந்தபுரம்,

பாளையங்கோட்டை – 627 002.

✆ தொலைபேசி (0462) 2572665

ஆசிரியரின் 76–வது நூல்

முதற் பதிப்பு	:	மார்ச் 2009
கணினி வடிவமைப்பு	:	நான்சி கணினியகம், பாளையங்கோட்டை
முகப்போவியம்	:	N. சங்கர், பாளையங்கோட்டை
அச்சிட்டோர்	:	சிவசக்தி அச்சகம், சிவகாசி.

இலவச வெளியீடு

எண்ண அலைகள்

அன்னைத் திருநாட்டின் விடுதலைப் போராட்ட கால சரித்திரம் பற்றிய குறிப்புகள் பல பதிவு பெறாமலும், கோர்வையாக்கப்படாமலும், இங்கும் அங்கும் சிதறிக் கிடக்கின்றன. அன்றைய காலகட்டத்தில் வாழ்ந்த பல தலைவர்கள், அந்தத் தலைவர்களுடன் பழகியவர்கள் பலர் இன்று மறைந்துவிட்டனர்.

இன்னும் சிலரோ நாட்டையும் தங்களையும் உயர்த்திடும் என்று நம்பிய அனுபவங்களே, தங்களது சொந்த வாழ்க்கையில் தோல்வியைத் தேடித்தந்துவிட்டன என்ற ஏக்கத்தில் மனம் முறிந்து, அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயங்கி, அதனை மறைத்தனர்.

அக்காலத்துத் தலைவர்களின் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் தொகுத்துத் தந்துள்ள நூல்கள் மிகக் குறைவே.

அவற்றில் வரலாற்றுக் கண்கொண்டு, ஆய்வு செய்பவனுக்குத் தேவையான முழு விவரங்களுடன் முறையாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளவை ஒரு சிலவே.

நாட்டு வரலாற்றின் மகத்தான கால கட்டத்தில் பங்கு கொண்ட வீரத்தியாகிகளின் வாழ்க்கை வரலாற்றை, அவர்களது தீரச் செயல்களை வருங்காலத் தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு வழங்க வேண்டியது வரலாற்றாளர்களின் தலையாய கடமையாகும்.

முத்தையாதாஸ்

1989-இல் இந்திய நாடாளுமன்றத் தேர்தல்; சிவகாசி நாடாளுமன்றத் தொகுதி; தமிழர் தலைவர் **வைகோ** போட்டியிடுகிறார். அந்தத் தேர்தல் பணிக்காக அடியேன் சாத்தூரில் மாதக்கணக்கில் தங்கிப் பணியாற்றினேன். இளம் வயதிலே இதயத்திலே தேக்கி வைத்திருந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வரலாற்றைத் தேடும் பணியில், தேர்தல் பணியின் ஓய்வின்போது, 'சாத்தூரில் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுகள் யாராவது வாழ்ந்து வருகிறார்களா? தேடினேன்; விசாரித்தேன்; விவரங்களை அறிந்து கொண்டேன்.

கடிகார ரிப்பேர் தொழில் செய்துவரும் முத்தையாதாஸ் சாத்தூரில் இருக்கிறார்; இவர் விடுதலை வீரர் விஸ்வநாததாஸின் புதல்வர் என்ற தகவல் தெரிந்ததும் ஒரு நாள் அவரது இல்லத்திற்குச் சென்றேன். வீட்டில் தாய்மார்கள் 'தீப்பெட்டி' அட்டைகளை ஒட்டிக் கொண்டிருந்தார்கள்.

என்னைப் பார்த்த மாத்திரத்திலேயே முத்தையாதாஸ், என்னை முஸ்லிம் என்று அடையாளம் கண்டுகொண்டார்.

தியாகி விஸ்வநாததாஸ் பற்றி கேட்டேன்; அவர்கள் குறித்த பழைய பிரசுரங்கள் ஏதும் உள்ளதா என்றும் கேட்டேன். ஏமாற்றம்தான் எளியேனுக்கு மிச்சமாயிற்று.

மாளிகை போன்ற வீடு

விஸ்வநாததாஸின் பிரமாண்டமான அரண்மனை போன்ற வீட்டின் பிரேம் செய்யப்பட்ட புகைப்படத்தை எடுத்து என்னிடம் காட்டினார்.

இவ்வளவு பெரிய வீட்டுக்குச் சொந்தக்காரர் உங்கள் தந்தை.

நாட்டு விடுதலை வேள்வியில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார். அந்தக் குடும்பத்தின் நிலை இவ்வளவு சிரம நிலையிலா? வேதனைப்பட்டேன். உள்ளம் துடித்தேன்.

தேவி ஸ்டுடியோ

'அய்யா, இங்கு ஏதாவது ஒரு ஸ்டுடியோ வரை வாருங்கள்; மாளிகை போன்ற அந்த வீட்டின் புகைப்படத்தை இன்னொரு பிரதி நான் எடுத்துக் கொள்கிறேன்' என்றேன். அவரும் என்னுடன் 249 மெயின் ரோட்டில் உள்ள சாத்தூர் தேவி ஸ்டுடியோ வந்தார். வீட்டின் புகைப்படத்தின் நகலை எடுத்துக் கொண்டேன்.

அவர் அறிந்திருந்த விவரங்களை கேட்டுத் தெரிந்து கொண்டேன். 'அய்யா காபி சாப்பிடுகிறீர்களா' என்று கேட்டார். கடையில் வாங்கித் தந்தால் சாப்பிட மாட்டேன். உங்கள் வீட்டில் தயாரித்துத் தாருங்கள். காபியை குடிக்கிறேன் என்றேன். அவரது இல்லத்தில் தயாரான காபியை குடித்துவிட்டு அங்கிருந்து சென்றேன்.

நீறுபூத்த நெருப்பு

என் இதயத்துள்ளே விஸ்வநாததாஸ் குறித்த விபரங்களைத் தேடும் எண்ணம் நீறுபூத்த நெருப்பாயிற்று. தேடினேன்; தேடினேன்; தேடிக் கொண்டேயிருந்தேன்.

கவிஞர் மதிமாறன் – 1985

1985 ஆம் ஆண்டு டிசம்பரில் விஸ்வநாததாஸின் நூற்றாண்டு விழாவையொட்டி சென்னை சூளை மருத்துவர் சமூக அறக்கட்டளையின் சார்பில் கவிஞர் மதிமாறன் எழுதி வெளியிட்ட 'நாட்டுணர்வு ஊட்டிய நடிகவேள் தியாகி விஸ்வநாததாஸ்' என்னும் 32 பக்கங்கள் கொண்ட சிறுநூல் வெளிவந்துள்ளதை அறிந்தேன்.

ஆசிரியர் மு. செல்லப்பன் – 1996

பட்டதாரி ஆசிரியர் மு. செல்லப்பன் எழுதிய 'வீரத்தியாகி விஸ்வநாததாஸ்' எனும் நூல் 1996-இல் வெளிவந்தது.

பாவலர் ஆ. முத்துராமலிங்கம்

பழகுதற்கு இனிய பண்பாளர், மறைந்த எனது நெருங்கிய நண்பர், பாவலர் ஆ. முத்துராமலிங்கம் அந்த நூலில், விஸ்வநாததாஸின் புகழ் பாடியுள்ள 'நெஞ்சினிக்கும்' என்ற தனது கவிதை வந்துள்ளதைத் தெரிவித்து, அந்த நூலையும் எனக்குத் தந்தார்கள். அந்தக் கவிதைத் துளி இதோ . . .

உமிழ்ந்துவிடும் வெள்ளையர் முகச்சேற் றில்!ஓ!
ஊழிக்கூத்தே! விசுவநாத தாசரென்னும்
சிமிழ்க்கின்ற தேனூற்றே! ஈகி உன்றன்
சிலிர்க்கின்ற வரலாறு நெஞ்சி னிக்கும்!

நூல் முழுவதையும் ஒரே மூச்சில் வாசித்தேன்.

'இதயம் பூரிக்கிறார் இலக்கியச் செல்வர்' என்று குமரிஅனந்தனின் வாழ்த்து அந்த நூலில் இடம்பெற்றிருந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக அப்போது அவர் இருந்தார். அதில் '**1911–ஆம் ஆண்டு அண்ணல் காந்தியடிகள் தூத்துக்குடி** *வந்தபோது விஸ்வநாததாஸ் பாடிய பாடலைக் கேட்டார். தமிழ்ப்பாட்டாக இருந்தபோதிலும் காந்தியடிகளைக் காந்தமாக ஈர்த்தது. 'இசையால் இந்தியத் தாயின் அடிமை விலங்கை உடைத்தெறிய மக்களைத் தட்டி எழுப்புங்கள்' என்றார் காந்தி மகான். அன்றிலிருந்து கதராடை அணிந்து பாரத மாதாவிற்குத் தொண்டு செய்யும் தளபதியானார் தாஸ் என்று எழுதியுள்ளார்.*

திருப்புமுனை

'வீரத்தியாகி விஸ்வநாததாஸ்' நூலின் உள்ளே ஆசிரியர் மு. செல்லப்பன், குமரிஅனந்தனின் கருத்தை அடியொற்றியே எழுதுகிறார்.

"புராண நாடகங்களில் நடித்துத் தெய்வங்களைக் குறித்துப் பாட்டுப் பாடிப் போராடும் புகழோடும் வாழ்ந்து கொண்டிருந்த வேளையில் 1911-ல் மகாத்மா காந்தியடிகள் தூத்துக்குடி வருகை தந்தார்கள். மகாத்மா காந்தியடிகள் கலந்து கொண்ட அம்மேடையில் பாடுமாறு தாசைக் கேட்டுக் கொண்டனர்.

தாசின் குரல் இனிமையைக் கேட்டு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். காந்தியடிகளும் இவர் பாடிய பாடலைக் கேட்டு மகிழ்ந்தார்.

காந்தியடிகளிடம் தாசை அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அவரைப் பாராட்டிய காந்திமகான் தாசிடம் தங்களுடைய இசைத் திறனை நாட்டு விடுதலைக்கு பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். மகாத்மா காந்தியின்பால் மட்டற் அன்பும் நாட்டின் விடுதலையில் மிகுந்த ஆர்வமும் கொண்டிருந்த தாசின் மனதில் இவ்வேண்டுகோள் ஆழமாகப் பதிந்தது. அவர் மனதில் ஏற்கனவே கனன்று கொண்டிருந்த சுதந்திரக் கனலைச் சுடர் விட்டு எரியச் செய்தது.

இதுவரை விலை உயர்ந்த பட்டாடைகள் அணிந்து வந்த தாஸ் அன்று முதல் கதர் கட்ட தீர்மானித்தார். ஆங்கில ஆட்சிக்கு எதிராக நாடக மேடைகளில் பாடல்களைப் பாட வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு ஏற்பட்டது." இது ஆசிரியர் மு. செல்லப்பன் தரும் தகவலாகும்.

அ.மா. சாமி

அண்ணல் காந்தியடிகள் 1911-இல் தூத்துக்குடி வருகை தந்தார் என்று வேறு யாராவது எழுதியுள்ளார்களா? தேடினேன்.

'தமிழ் இதழ்கள் தோற்றம் - வளர்ச்சி' என்ற நூலில் அ. மா. சாமி கூறுகிறார்: 1911-இல் மகாத்மாகாந்தி தூத்துக்குடிக்கு வந்தபொழுது அவர் பேசிய மேடையில் விசுவநாததாசு பாடினார்.

இந்திய விடுதலைப் போர் செந்தமிழ் தமிழ் தந்த சீர்

அ.மா.சாமி எழுதிய 'இந்திய விடுதலைப் போர் செந்தமிழ் தந்த சீர்' என்ற நூலில் (1998) பக்கம் 357-இல் அதே தகவலை திரும்பவும் தந்துள்ளார்.

1911 – 1915

வரலாற்றில் 1911-களில் காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் வாழ்ந்து வருகிறார்.

1915-இல் தான் அண்ணல் காந்தியடிகள் இந்தியாவிற்கு திரும்ப எண்ணுகிறார். 1915-இல்தான் இந்திய அரசியலில் பங்கேற்கிறார்.

09.01.1915

1915 ஜனவரி 9-இல்தான் பம்பாயில் (மும்பை) வந்து இறங்குகிறார்.

Gandhi Landed in Bombay on January 9, 1915*

காலவழு

1911-களில் காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் வாழ்ந்து வருகிறார். 1915-இல் தான் இந்தியாவிற்கு வருகிறார். ஆனால் விஸ்வநாததாஸ் சரிதத்தை எழுதுகையில் 1911-இல் தூத்துக்குடியில் விஸ்வநாததாஸ் காந்தியடிகளைச் சந்தித்தார் என்று, குமரி அனந்தன், அ.மா.சாமி, மு. செல்லப்பன் போன்றவர்கள் குறிப்பிடுவது கால வழுவாகும்.

கு. சேதுராமன்

'தேச விடுதலையும் தியாகச் சுடர்களும்' என்னும் தொகுப்பு நூல் நண்பர் த. ஸ்டாலின் குணசேகரனால் 1998-இல் வெளியிடப்பட்டது. அதில் கு. சேதுராமன் 'வீரத்தியாகி விஸ்வநாதன்' எனும் கட்டுரை எழுதியுள்ளார். அதில் கூறுகிறார்:

'1925 மார்ச் அகில இந்திய காங்கிரசுக்கு வயது நாற்பது. முதன் முதலாக இந்திய தேசிய இயக்கத்தின் வலிமையை இங்கிலாந்தியர் சோதனை செய்யத் துவங்கிய காலம் சைமன் கமிஷன் என்ற போலி அரசியல் திட்டத்தைப் படம் போட்டுக் காட்டி, சுதந்திர இயக்கத்தைத் திசை திருப்ப முனைந்தார் சர். சைமன்.

கமிஷனின் வருகை விடுதலை இயக்கத்தைப் போர்க்களத்துக்கு அறைகூவியது. தொடர்ந்து அன்னியத் துணி பகிஷ்காரம். இந்தியா கொந்தளித்தது. மகாத்மாஜி கட்சிக்கு நிதி

---

* Gandhiji, His Life and Work, Published on his 75th Birthday October 2, 1944, p. 344.

சேர்க்கவும், தொடரும் ஆங்கில எதிர்ப்புப் போராட்டங்களுக்கு ஆதரவு திரட்டவும் தென்னகமெங்கும் சுற்றுப்பயணம் செய்தார்.

என்.எம்.ஆர். சுப்பராமன்

மதுரை என்.எம்.ஆர். சுப்பராமன் இல்லத்திலிருந்து தூத்துக்குடி பயணமாகிறார் என்ற ஆர்வமிக்க தகவலை விஸ்வநாததாஸ் கேள்விப்பட்டார். தனது தட்டப்பாறை நாடகத்தை ஒத்தி வைத்தார். காந்தியின் மேடையருகே காத்திருந்தார்.

தனது மாணிக்கத் தலைவர் மண்ணில் கால் வைத்த செய்தி கேட்டதால் உள்ளம் ஆரவாரித்தது . . . அந்தக் கூட்டத்தின் போதுதான். காந்தியடிகள், **விஸ்வநாததாஸ் இனிமையான பாடகர் தேசப்பற்றுள்ள நாடக நடிகர். மக்கள் அவரைக் கொண்டாட வேண்டும். அவரை என் இயக்கத்திற்கு அழைக்கிறேன்'** என்று கேட்டுக் கொண்டார் என்று குறிப்பிட்டுள்ளார்.

கு.சேதுராமன் 1925-களில் மதுரை என்.எம்.ஆர். சுப்பராமன் இல்லத்திலிருந்து காந்தியடிகள் தூத்துக்குடி பயணமாகிறார். அங்குதான் விஸ்வநாததாஸைக் கண்டார். அதன் பின் இயக்கத்திற்கு அழைத்தார் என்பதைப் போல் எழுதியுள்ளார்.

25.11.1934 – 26.1.1934 27.1.1934

மதுரையில் என்.எம்.ஆர். சுப்பராமன் இல்லத்தில் காந்தியடிகள் தங்கியிருந்தது 25.1.1934, 26.1.1934, 27.1.1934 ஆகிய நாட்கள்; இது குறித்து என்.எம்.ஆர். சுப்பராமன் வீட்டிலேயே கல்வெட்டு உள்ளது.

தமது கோஷ்டியாருடன்

'மகாத்மா காந்தியடிகள் தமது கோஷ்டியருடன் ஹரிஜன பிரயாணம் செய்த காலத்தில் 25.1.1934 முதல் 27.1.1934 வரை இந்த பங்களாவில் தங்கியிருந்தார்* என்று தெளிவாக வரலாறு கூறுகிறது.

இரா. வேலுச்சாமி

'1925-இல் தூத்துக்குடிக்கு மகாத்மா காந்தியடிகள் வந்திருந்த சமயம் . . . விஸ்வநாததாஸ் நடித்த நாடகம் ஒன்றினைப் பார்த்த

* கானமஞ்சரி சம்பத்குமார், மதுரை காந்தி, நா.ம.ரா. சுப்பராமன், சென்னை 2006, பக். 74.

சமயம் . . . விஸ்வநாததாஸ் நடித்த நாடகம் ஒன்றினைப் பார்த்த மகாத்மா மகிழ்ந்து போகிறார். விஸ்வநாததாஸ் காந்தியடிகளிடம் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டபோது, **காந்தியடிகள், தேச சேவைக்கு உன்னை அர்ப்பணித்துக் கொள்**' என்று அறிவுரை வழங்குகிறார்.

தூத்துக்குடி நிகழ்ச்சிக்குப் பின் விஸ்வநாததாஸின் வாழ்க்கை முறைகள் முற்றிலும் மாறிப் போகின்றன என்று இரா. வேலுச்சாமி எழுதியுள்ளார்.* 1925-இல் காந்தியடிகள் தூத்துக்குடிக்கு வந்தாரா? இல்லை. இல்லவே இல்லை.

டாக்டர் A. கோசல்ராம்

வீரத்தியாகி விஸ்வநாததாஸ் வரலாற்றினை எழுதிடும்போது ஆண்டு குறிப்பிடுவதில் இத்தனை தவறுகளா? புவி போற்றும் அந்தப் புனிதரின் வாழ்க்கை வரலாற்றினை வரலாற்றுப் பிழையின்றி எழுதிட முடிவெடுத்தேன். அதன் விளைவே இந்தச் சிறு நூல்.

இதனை எழுதிட வாய்ப்பளித்த எல்லாம் வல்ல இறைவனுக்கும், காலத்திற்கும் வெளியிட உதவிய பாளையங்கோட்டை சொர்ணா மெடிக்கல் ஹால் Dr.A. **கோசல்ராம்**, **DHMS**, தமிழ்நாடு தியாகி விஸ்வநாததாஸ் தேசியப் பேரவை மாநிலத் தலைவர் S. முத்துராஜ், நூலினை நல்ல முறையில் கணினியாக்கம் செய்து தந்த நான்சி கணினியகத்திற்கும், நூலினை நல்ல முறையில் அச்சிட்ட சிவசக்தி ஆர்ட்ஸ் மற்றும் **கா. சுப்பிரமணியன்** ஆகியோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

- செ. திவான்

28.03.2009,,
கல்வித் தந்தை சுலைமான் இல்லம்,
வள்ளல் வைகோ நூலகம்,
106 F, 4A (புதிய எண் 148) திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002.
தமிழ்நாடு.
✆ (0462) - 2572665

* கலையும் வாழ்க்கையும், பக். 24, 25.

விடுதலை வேள்வியில் விஸ்வநாததாஸ்

"ஜெகமெங்கும் புகழ் பெற்ற வீர, தீர, பராக்கிரம ராஜாதி ராஜன், ராஜமார்த்தாண்டன், கடல் கடந்து சிங்கப்பூர், பினாங்கு, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளில் வெற்றிக் கொடி நாட்டிய சிங்கம் . . . கானவேலன், சங்கீத சாகித்ய, ஞான விடுதலை வீரர், தியாகச் செம்மல் விஸ்வநாததாஸ் வந்துவிட்டார். ஒரே ஒரு ஸ்பெஷல் நாடகம். இச்சமயம் தவறினால் மறுசமயம் வாய்ப்பதரிது. ஏமாந்து போகாமல் முன்னிடம் தேடுங்கள் . . . காணத் தவறாதீர்கள். தரை நான்கு அணா. பெண்களுக்குத் தனி இடம் உண்டு." என்று விளம்பரப்படுத்தப்பட்டு இந்திய சுதந்திர நாடகப் பாடகர், நாடகப் புரட்சி நடிகர், சுதந்திர வீரர், சத்தியாக்கிரகி, சுதந்திரவீரத் தியாகி, நாட்டுணர்வு ஊட்டிய நடிகவேள், விடுதலை வேள்வியில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட வேங்கை விஸ்வநாததாஸின் வீர வரலாற்றின் குறிப்புக்கள் இதோ . . .

சிவகாசியில்

பாரதத் திருநாட்டில் இந்துக்கள் போற்றும் புண்ணியத் தலங்களுள் தலைமை சான்றது காசி. இத்தகைய காசியை நோக்கித்தொழுத தமிழர் தமது நாட்டில் அப்பதியின் பெயரைச் சில ஊர்களுக்கு அமைத்துள்ளார்கள். பாண்டிய மன்னர் சிவநேயச் செல்வன் அரிகேசரி பராக்கிரம பாண்டியன் சித்திரா நதிக்கரையில் (1420 - 1462) விசுவநாதர் ஆலயம் அமைத்தான். தென்காசி ஆயிற்று. தென்காசி கோயில் பிரதிட்டை செய்ய சிவலிங்கம் கொண்டு வர காசிக்குச் சென்றான். திரும்பும் வழியில் காடாக இருந்த சிவகாசிப் பகுதியில் அவன் சுணங்க நேர்ந்தது. லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வதற்குக் காத்திருந்த நேரத்திலும் நாளிலும் அந்த இடத்திலேயே கோயில் கட்டி விட்டான். இதனால் சிவகாசி என்று பெயர் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.*

சிறிய ஜப்பான் என்று பெயர் பெற்று தொழில் துறையில் பெரிதும் முன்னேறியுள்ள நகரம் சிவகாசி.

---

* அ. ராமசாமி, தமிழ்நாடு மாவட்ட விவரச் சுவடிகள், இராமநாதபுரம், சென்னை, 1990, ப, 1214; சோமலெ, இராமநாதபுரம் மாவட்டம், சென்னை, 1972, ப. 451.

சுப்பிரமணியம் வைத்தியர் – ஞானம்மாள்

1886 ஜூன் 16; இசை, மருத்துவம், நெசவு மூன்றும் அறிந்த சிவகாசி சுப்பிரமணியம் வைத்தியர் - திருமங்கலம் ஞானம்மாள் தம்பதியருக்கு, மருத்துவர் குலத்தில், இரண்டாவது மகனாக சிவகாசி ஞானியார் தெருவில் பிறந்தவர் வீரத்தியாகி விஸ்வநாததாஸ்.

உடன் பிறந்தவர்கள்

விஸ்வநாததாஸின் உடன் பிறந்தவர்கள் ***கருப்பசாமி, சண்முகதாஸ், குருவம்மாள், செந்திலம்மாள், பேச்சியம்மாள்*** *ஆகியோர் ஆவர்.*

திருமங்கலத்தில் தாசரிதாஸ்

மண்வளத்தாலும், மண்கலங்கள் செய்யும் தொழிலாளர்களின் கைவன்மையாலும் 'திருமங்கலம்' என்னும் பெயர் ஏற்பட்டது. விஸ்வநாததாஸ் தனது இளமையில் திருமங்கலத்தில் தாத்தா வீட்டில் வளர்ந்தார். அப்போது ***'தாசரிதாஸ்'*** *என்ற செல்லப் பெயரில் அவரை அழைத்தனர்.*

திண்ணைப் பள்ளிக் கூடத்தில்

பின்னர் சிவகாசியில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட விஸ்வநாததாஸிற்கு படிப்பில் நாட்டமில்லை. சுற்றுப்புறங்களில் தெருக்கூத்துகள் நடந்தால் சென்று பார்ப்பார்; கூத்துக்களில் பேசுவதை, பாடுவதை வீட்டில் வந்து மற்றவர்களிடம் பேசி, பாடி நடித்துக் காட்டுவார்.

தொந்தியப்ப நாடார்

சிவகாசி தோல்மண்டி உரிமையாளர் தொந்தியப்ப நாடார் விஸ்வநாத தாஸின் நாடக ஆர்வத்தைக் கண்டு, அவருக்கு வழிமுறைகளோடு பாடவும், நாடகங்களில் நடிக்கவும் பயிற்சிகள் அளித்தார். சிறு வயதிலிருந்தே நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். முதலில் பெண் வேடங்களே விஸ்வநாததாஸிற்குத் தரப்பட்டது.

கீழ ஈரால் நல்ல மாடசாமி – சண்முகத்தாய்

தூத்துக்குடி மாவட்டம் கீழ ஈரால் நல்லமாடசாமியின் புதல்வி 15 வயதான சண்முகத்தாய்க்கும், 20 வயதான விஸ்வநாததாசுக்கும் திருமணம் நடைபெற்றது.

1896 – 1917

1896 அக்டோபர் 14; அண்ணல் காந்தியடிகள் முதன் முதலாக தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்தபோது தமிழகத்திற்கு, சென்னைக்கு வந்தார்.

கஸ்தூரிபாவுடன், காந்தியடிகள் இந்தியாவிற்கு நிலையாகத் திரும்பிய பின் 17.04.1915-இல் சென்னைக்கு வந்தார். 13.02.1916-இலும் 14.09.1917-லும் திரும்பவும் சென்னைக்கு வந்தார்.

27.03.1919

காந்தியடிகள் 5-வது முறை தமிழக விஜயத்தின் போது, 18.03.1919-இல் சென்னைக்கு வந்தார். 26.03.1919 போட்மெயிலில் மதுரைக்கு வந்து பொதுக் கூட்டத்தில் உரையாற்றிவிட்டு அன்று இரவே தூத்துக்குடிக்கு பயணமானார்.

27.03.1919 காலையில் தான் காந்தியடிகள் முதன் முதலாக தூத்துக்குடிக்கு வருகை புரிந்து, மாலையில் ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும் கலந்து கொண்டார். 28.03.1919 காலையில் தூத்துக்குடியிலிருந்து புறப்பட்டு மதுரை சென்றார்.*

காந்தியடிகள் அறிமுகம்

27.03.1919-இல் தூத்துக்குடியில் காந்தியடிகள் கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தில் விஸ்வநாததாஸ் தனது இனிய குரலில் பாடினார்; காந்தியடிகள் விஸ்வநாததாஸின் குரலில் மயங்கினார். விஸ்வநாததாஸ் காந்தியடிகளுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். விஸ்வநாததாஸைப் பாராட்டிய காந்தியடிகள் அப்போது **'தேச சேவைக்கு உன்னை அர்ப்பணித்துக் கொள்'** *என்று வேண்டுகோள் விடுத்தார். அதுவரை வெறும் பொழுது போக்கிற்காகப் பயன்பட்டு வந்த புராண நாடகங்களில், முதன் முறையாக விஸ்வநாததாஸால் தேசியப் பாடல்களையும், விடுதலை இயக்கத்திற்கான வீர உணர்வைத் தூண்டும் பாடல்களையும், எந்த வேஷம் போட்டாலும் அந்த வேஷத்திலேயே வெள்ளையர்ளை எதிர்த்தும் பாடத் துவங்கினார்; பறங்கியர் பார்வை விஸ்வநாததாஸ் மீது விழத் துவங்கியது. பாடல்களை தடைசெய்ய ஆரம்பித்தனர். ஒரு பாடல் தடை செய்யப்பட்டால் வேறு பாடலைப் பாடினார் விஸ்வநாததாஸ்.*

---

* அ. ராமசாமி, தமிழ்நாட்டில் காந்தி, சென்னை, 1969, பக். 957, 958.

21.09.1921

அண்ணல் காந்தி மதுரைக்கு வருகிறார். மதுரையில் பொதுக் கூட்டம். 50,000 மக்கள் திரண்டிருந்தனர். மதுரை - இராமநாதபுரம் மாவட்ட மகாஜன சபையினரும், மதுரை மாவட்ட காங்கிரஸ் குழுவினரும், மதுரை வர்த்தக குமாஸ்தாக்கள் சங்கத்தினரும் வரவேற்பளித்தார்கள்.

எஸ்.டி.கிருஷ்ணஐயர்

வரவேற்புரை ஒன்றை டைப் அடித்து, கதர் பையில் போட்டு எஸ்டி. கிருஷ்ண ஐயர் காந்தியிடம் கொடுத்தார். அவரே காந்தியின் பேச்சை கூட்டத்தில் மொழிபெயர்த்தார்.

பெருந்தலைவர் காமராசர்

*காந்தியடிகள் இந்தக் கூட்டத்திற்கு வருகைதரும் முன் மக்களை அமைதிப்படுத்திட எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் தேச விடுதலைப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார். இந்தக் கூட்டத்தில்தான் பெருந்தலைவர் காமராசர், காந்தியடிகளை முதன் முதலாகப் பார்த்தார். இதற்கு அடுத்தநாள் தான் 22.09.1921 காந்தியடிகள் தனது மேலாடைகளைத் துறந்து, அரை நிர்வாணப்பக்கிரியானார்.**

திருக்குறளில்

தித்திக்கும் திருக்குறளில் துறவற இயலில் 'நிலையாமை' அதிகாரத்தில் வள்ளுவர் கூறுவார்.

> 'கூத்தாட்டு அவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்
> போக்கும் அது விளிந்தற்று' (குறள் 332)

நாடக அரங்கின் அமைப்பையும் நாடகம் பார்த்துப் போகும் மக்களின் மனப்போக்கையும் திருவள்ளுவர் எடுத்துக் கூறியுள்ளார்.

திருவாசகத்தில்

> 'நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான் நடுவே
> வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்'

மாணிக்க வாசகர் திருவாசகத்தில், திருச்சதகப் பதிகம் பதினோராவது பாடலில் 'நாடகம்', 'நடிப்பு' என்ற சொல்லை

---

* அ. ராமசாமி, தமிழ்நாட்டில் காந்தி, சென்னை, 1969, பக். 350 – 353.

*பயன்படுத்தியுள்ளார். 'அடியார் கோலம் பூண்டு நடிக்கின்றேன்' என்று கூறுகிறார்.**

*உலகம் உவக்க உயர்ந்து வளர்ந்துள்ள சிறந்த கலையாக விளங்குவது நாடகம். நடனத்திலிருந்து நாடகம் தோன்றி இருக்கிறது என்ற உலக உண்மை.***

சிலப்பதிகாரத்தில் கருத்துக்களை ஒருத்தி வெளிப்படுத்தும் தனி நாட்டியம், ஒருத்தியே கதை தழுவி ஆடிடும் கூத்து, கதை தழுவிப் பலர் ஆடிடும் நாட்டியம் காணக் கிடைக்கின்றது. குறுந்தொகை (31), புறநானூறு (24), கலித்தொகை (78), ஆடற்கலையை விளக்குகின்றன.

முதலாம் இராஜராஜன்

சோழப் பெருவேந்தன் முதலாம் இராஜ ராஜன் காலத்தில் **'இராஜ ராஜேஸ்வர நாடகம்', 'இராஜ ராஜன் நாடகம்'** *ஆகியவை அரசு ஆதரவுடன் நடந்ததை கல்வெட்டுச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. தமிழ் நாடக வரலாறு நீண்ட நெடிய வரலாற்றுக் குறிப்புக்களை உடையது. விரிவஞ்சி நிறுத்திக் கொள்கிறேன்.*

முதல் தேசிய நடிகர்

*தேசிய உணர்வு தமிழ்நாட்டில் பட்டி தொட்டிகளில் எல்லாம் பரவ நாடகம் நல்ல துணையாக இருந்தது. எஸ்.எஸ். விசுவநாததாஸ் முதல் தேசிய நடிகராக நாடக மேடை ஏறினார்.****

சங்கரதாஸ் சுவாமிகள்

*19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ்நாடகத் துறையில் முன்னோடியாக விளங்கி தமிழ்நாடக மேடைக்கு புத்துயிர் அளித்து, அதனைத் தழைத்தோங்கச் செய்தவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்.*****

---

* பி. இராமநாதபிள்ளை, திருவாசகம் தெளிவுரை, சென்னை, 1969, ப. 65.

** Henry W. Wells, The Classical Drama of India, p. 11.

*** ஏ.என். பெருமாள், இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடகம், சென்னை, 1988, ப. 54.

**** அரிமளம், சு. பத்மநாபன், தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில் இசைக்கூறுகள், புதுச்சேரி, 2000, ப. 1.

சுவாமிகளின் மாணவர்கள்

தமிழ் நாடக வரலாற்றில் தனக்கென நீண்டதொரு பாரம்பரியத்தை உருவாக்கிய சுவாமிகளின் மாணவர்கள் ஜி.எஸ். முனுசாமி நாயுடு, ஜெகந்நாத நாயுடு, சாமிநாத முதலியார், சீனிவாச ஆழ்வார், நடேச பத்தர், ராஜா. வி.எம். கோவிந்தசாமிப் பிள்ளை, எம்.ஆர். கோவிந்தசாமிப் பிள்ளை, சி. கன்னையா, சி.எஸ். சாமண்ணா ஐயர், மகாதேவ ஐயர், சூரிய நாராயண பாகவதர், சுந்தரராவ், கே.எஸ். செல்லப்ப ஐயர், இசக்கி முத்து வாத்தியார், கே.எஸ். அனந்த நாராயண ஐயர், பி.எஸ். வேலுநாயர், பைரவ சுந்தரம் பிள்ளை, சீனிவாச பிள்ளை, எஸ்.ஜி. கிட்டப்பா சகோதரர்கள், டி.கே. சண்முகம் சகோதரர்கள், பாலம்மாள், பாலாமணி, அரங்கநாயகி, வி.பி. ஜானகி, கோரங்கி மாணிக்கம், டி.டி. தாயம்மாள் ஆகியோர் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் பிரசித்தி பெற்று விளங்கியவர்களாவர்.* இவர்கள் தவிர மதுரை மாரியப்ப சுவாமிகள், சங்கரலிங்கக் கவிராயர், சந்தான கிருஷ்ண நாயுடு, டி.கே. சுந்தர வாத்தியார், எஸ்.எஸ். சண்முக தாஸ், மதுர பாஸ்கரதாஸ், உடுமலை நாராயணகவி, கோவை லட்சுமணதாஸ் போன்ற நாடக, இசைப் புலவர்களும் சுவாமிகளின் மாணவர்களாவர். பிற்காலத்தில் இசை நாடக மேடையை, சுதந்திரப் போராட்ட உணர்வு வெளிப்பாட்டுக் களமாகவும் பயன்படுத்திய புகழ்பெற்ற நடிகர் எஸ்.எஸ். விஸ்வநாததாசும் சுவாமிகளின் மாணவரேயாவார்.**

ஜில்லா போர்டில் – காங்கிரஸ் கமிட்டியில்

விஸ்வநாததாஸ் மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா காங்கிரஸ் கமிட்டியில் உறுப்பினராகச் செயல்பட்டார்.* மதுரை மாவட்டம் ஜில்லா போர்டில் காங்கிரஸ் சார்பில் உறுப்பினராகவும் விசுவநாததாஸ் பணியாற்றியுள்ளார்.**** விஸ்வநாததாஸ் திருமங்கலம் தாலுகா காங்கிரஸ் காரியங்களுக்கு நிறைய பண உதவி செய்துள்ளார்.*****

---

* அவ்வை தி.க. சண்முகம், தமிழ்நாடகத் தலைமையாசிரியர், சென்னை, 1955, ப. 6.

** எஸ்.வி. சகஸ்ரநாமம், நாடகக் கலையின் வரலாறு, மதுரை, 1975, ப. 82.

*** M.M. சிதம்பரநாதன், விடுதலைப் போராட்டத்தில் கலைஞர்கள், நடிகன் குரல், சென்னை, ஆகஸ்ட் 1957.

**** கருப்பையா, விடுதலை இயக்கத்தில் தமிழகக் கலைஞர்கள், சென்னை, 1994, ப. 37.

***** நெ. சிதம்பரபாரதி, ரா. ஸ்ரீனிவாஸவரதன், மதுரை, மதுரை ஜில்லா தியாகிகள் மலர், 1948, ப. 164.

ஊர்தோறும் நாடகம். மேடை தோறும் தேசியப் பாடல். புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட விஸ்வநாததாசின் பாடல்கள் வெள்ளை ஆட்சியாளர்கள் வரை எட்டின.

'விஸ்வநாததாஸ் இனி ஆங்கிலேயர்களைத் தாக்கியோ விடுதலை பற்றியோ எந்தப் பாடலையும் பாடக் கூடாது' எனத் தடையாணை பிறப்பித்தது ஆங்கிலேய அரசு. ஆனாலும் அவ்வாணையைப் புறக்கணித்தார், விஸ்வநாததாஸ்.

ஆங்கில ஆட்சியின் ஆவணங்கள் இந்த உண்மையை பறை சாற்றுகின்றன. தமிழ்நாடு அரசின் சென்னை ஆவணக் காப்பக ஆவணம் தரும் செய்தி இதோ ...

The Police labelled him as 'the man who has the reputation of singing seditious songs' and shadowed his movements. Undaunted he would sing: A posse of police/ are following us like tigers/we are not frightened.*

'விஸ்வநாததாஸ் இராஜ துரோகப் பாடல்களை தொடர்ந்து பாடி வருகிறார். நடுக்கமற்ற, அஞ்சிப் பின் வாங்காத, உறுதி தளராத குரலில் அவர் தொடர்ந்து அரசுக்கு விரோதமாகப் பாடி வருகிறார். எதற்கும் அஞ்சாதவராக துணிவுடன் செயல்பட்டு வருகிறார்' என்று வெள்ளையர் கால ஆவணங்கள் விஸ்வநாததாஸின் வீரத்தைப் பறை சாற்றுகின்றன. போலீசார் புலிகள் போல எங்களைப் பின் தொடர்ந்து வந்தாலும், அதனைக் கண்டு அஞ்சப் போவதில்லை என்று மேடை தோறும் முழங்கினார்.

காங்கிரசிற்கு நிதி உதவி – தேசிய எழுச்சி

'தேசியப் பாடகர் விஸ்வநாததாஸ் தனது செயல்களினால் காங்கிரசின் வளர்ச்சி நிதிக்கும், காங்கிரசின் புதிய உத்வேகத்திற்கும் பெரிதும் உதவி வருகிறார்' என்று சேலம் மாவட்ட மாஜிஸ்டிரேட் குறிப்பிட்டுள்ளார்.

The District Magistrate of Salem reported after one of Das performances: 'We have had one Viswanatha Das, a singer, here. He gave a performance in aid of Congress funds which will give picketing a new lease of life.'**

S. தியோடர் பாஸ்கரன்

The use of popular music in the movement took on a new dimension when many artistes themselves took part in direct political action and thus

* Tamilnadu Archives, G.O.No. 1050, Public (G), 10.10.1931.

** Tamilnadu Archives, G.O. No. 897, Public (G) 02.09.1932.

gave a certain authenticity to the messages they were already communicating through songs. For the benfit of local Congress units, S.S. Viswanathan Das began to give independent concerts of national songs.

'வெள்ளையரை எதிர்த்து விஸ்வநாததாஸ் பாடிய தேசிய கீதங்கள் காங்கிரஸ் அமைப்புகளுக்கு பெரிதும் பயன்பட்டது. சுதந்திர எழுச்சியை ஊட்டியது. புதிய கலைஞர்களும் உற்சாகத்துடன் விடுதலை முழக்கமிட தூண்டுகோலாயிருந்தார். ஒவ்வொரு அமைப்புகளுக்கும் புதிய தேச பக்திப் பாடல்களை விஸ்வநாததாஸ் இயற்றி தந்தார்' என்று ஆய்வாளர் தியோடர் பாஸ்கரன் போற்றிப் புகழ்ந்துரைத்துள்ளார்.*

ஆங்கில ஆட்சிக்கு எதிராக

1917-ஆம் ஆண்டு முதல் நாடக மேடைகளில் நடித்து வந்தார் விஸ்வநாததாஸ்.** ஆங்கில ஆட்சிக்கு எதிராக நாடக மேடைகளில் பாடல்களைப் பாட வேண்டும் என்ற எண்ணம் விஸ்வநாததாசுக்கு காந்தியடிகளின் சந்திப்பிற்குப் பிறகு 1919-இல் ஏற்பட்டது. அரிச்சந்திரன், வள்ளி திருமணம், கோவலன், நல்லதங்காள் போன்ற நாடகங்களில் வரும் பாடல்களினிடையே ஆங்கில ஆட்சியை எதிர்த்து பாடல்கள் பாடினார். இப்பாடல்கள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றன.

ரௌலட் சட்டம்

முதல் உலகப் போர் முடிந்தவுடன் இந்தியப் புரட்சிக்காரர்களை அடக்கும் நோக்கத்துடன் புதிய சட்டம் இயற்ற சிட்னி ரௌலட் (Sydney Rawltt) என்ற ஆங்கிலேய நீதிபதியைத் தலைவராகக் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அக்குழு 1918 பிப்ரவரி 15-இல் அறிக்கை தந்தது. அதன் அடிப்படையில் அரசாங்கம் 'குழப்பவாத புரட்சிக் குற்றச் சட்டத்தை' (Anarchical and Revolutionary Crime Act) நிறைவேற்றியது. மனித உரிமைக்கும் நீதிக்கும் உலை வைக்கும் ரௌலட் சட்டத்தை காந்தியடிகள் முழு மூச்சுடன் எதிர்க்கத் துணிந்தார்.

---

* S. Theodore Baskaran, The Message Bearers, The Nationalist Politics and the Entertainment Media in South India 1880 - 1945, Madras, 1981, p. 55.

** ஏ.என். பெருமாள், இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடகம், சென்னை, 1998, ப. 110.

நாடெங்கும் எழுச்சி

1919 மார்ச் 30 **'சத்தியாகிரக நாளாக'** அறிவிக்கப்பட்டது. பின்னர் ஏப்ரல் 6 என்று மாற்றப்பட்டது. டில்லியில் பூரண ஹர்த்தால் நடைபெற்றது.

1919 ஏப்ரல் 7-இல் காந்தி மதுரா சென்றபோது மேற்கொண்டு பயணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. தடையை மீறிப் பயணம் செய்த காந்தி பஞ்சாப் எல்லையில் பால்வால் (Palwal) என்ற சிற்றூரின் ரயில் நிலையத்தில் கைது செய்யப்பட்டு பம்பாய்க்கு (மும்பை) கொண்டு செல்லப்பட்டார்.

அகமதாபாத், பம்பாய், டில்லி, அமிர்தசரஸ் நகரங்களில் புரட்சி வெடித்தது. வெள்ளையர்கள் தாக்கப்பட்டார்கள்; கொல்லப்பட்டார்கள்; பொதுச் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. தடைகள் மீறப்பட்டன. துப்பாக்கிச் சூடுகள் தொடர்ந்தன. இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ரௌலட் சத்தியாக்கிரஹத்தை நிறுத்தினார் காந்தி.

டாக்டர் சைபுதீன் கிச்சுலு

ஆங்கிலேய அரசாங்கம் அடக்குமுறையை நிறுத்தவில்லை. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற முஸ்லிம் வழக்கறிஞர் டாக்டர் சைபுதீன் கிட்சுலு (Dr. Saifudin Kitchlew) மருத்துவர் சத்யபால் இருவரும் மக்களிடம் செல்வாக்கு நிறைந்தவர்கள். இருவரையும் **'தரம்சாலா'** என்ற மலைநகருக்கு துணை கமிஷனர் கைது செய்து கொண்டு சென்றார்.

மைக்கேல் ஓட்வியர் (Michael O'Dwyer)

தேசியத் தலைவர்கள் இருவரையும் நாடு கடத்த பஞ்சாபின் லெப்டினென்ட் கவர்னராயிருந்த மைக்கேல் ஓட்வியர் உத்திரவிட்டார். மக்கள் சீறி எழுந்தனர். புரட்சி வெடித்தது.

வீர வணக்கம்

சுதந்திரப் போரில் பலியான தீரர்களுக்கு இரங்கல் கூட்டம் நடத்திட 20,000 பேர் 1919 ஏப்ரல் 13-இல் கூடியிருந்தனர். இரங்கல் கூட்டம் மாலை 4.30 மணிக்கு துவங்கிற்று.

ரெஜினால்டு டயர்

பிரிகேடியர் ரெஜினால்டு டயர் (Reginald Dyer) அன்று காலை பிறப்பித்த தடை உத்திரவு பற்றி அந்த மக்களுக்குத் தெரியாது.

தனது ஆணையை மீறி கூடிவிட்ட மக்களைப் பார்த்து கோபமுற்ற டயர் தோட்டாக்கள் தீரும் வரை சுடுமாறு உத்திரவிட்டார்.

ஜாலியன் வாலாபாக்

'ஜாலியன்' என்பது ஒரு குடும்பப் பெயர். அதன் சொந்தக்காரர் ஒரு ஜாலியன் (மந்திரவாதி); 'பாக்' என்றால் தோட்டம். அந்த இடத்திற்கு சிறிதும் பொருந்தாத பெயர். அங்கு தோட்டமுமில்லை. நந்தவனமுமில்லை. அது குப்பை மேடு. நாலா புறங்களிலும் வீடுகளின் கொல்லைப்புற சுவர்கள் மதில் போல் அடைப்பாக இருந்தது. மக்கள் தங்கள் வீட்டின் பின்புற ஜன்னல்களிலிருந்து குப்பைகளை எறிவதற்கு வசதியான இடமாக அது இருந்தது. திறந்த இடம், ஒரு குறுகிய சந்துவழியாகத்தான் அந்த இடத்திற்குள் செல்ல முடியும்.*

1650 ரவுண்டுகள்

பிரிட்டிஷ் ராணுவம் 1650 சுற்றுச் சுட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். 2,000 பேர்களுக்கு மேல் காயமுற்றனர்.** இரங்கல் கூட்டத்திற்குச் சென்றோர் இறந்துபட்ட கோரக் காட்சி அரங்கேறியது.

பஞ்சாப் படுகொலையை கண்டிப்பதற்காக அன்றையச் சூழலில் தமிழில் பாடல்கள் எழுந்தன. அந்தப் பாடலை விஸ்வநாததாஸ் தனது நாடக மேடைகளில் மிகுந்த உணர்ச்சியோடு பாடுவார்; அதனால் மக்களிடையே பேரெழுச்சி ஏற்பட்டது. விஸ்வநாததாஸ் பாடிய பாடல்கள் இதோ . . .

மதுரகவி பாஸ்கரதாஸ்

இந்திய விடுதலை எழுச்சிக் கீதம் பாடிய கவிஞர் மதுரகவி பாஸ்கரதாஸ் எழுதிய பாடல் இதோ . . .

பஞ்சாப் படுகொலை

ராகம் – ஹரிகாம்போதி தாளம்: ஆதி

பூங்கா விநோதமே என்ற பாடல் மெட்டு

---

* மகாத்மா காந்தி நூல்கள் எட்டாம் தொகுப்பு, சென்னை, 1961, ப. 257.

** R.C. Majumdar, History of Freedom Movement in India, Vol. III, Calcutta, 1963, p. 28, 29. Report of the Civil Disobedience Enquiry Committee, pp. 56 - 57.

பல்லவி

பஞ்சாப் படுகொலை பாரில் கொடியது
பழிபாவ முடையது (பஞ்)

அனுபல்லவி

அஞ்சாப் பெரும் வம்பனாம் சிறியவன்
அறநிலைதப்பிய சிறியவன் வேலை (பஞ்)

சரணங்கள்

அயல் தேசத்தார் அநியாயத்தால்
செயல் மாயத்தால் மாண்டு மடிந்தது (பஞ்)

அண்டையில் நின்றவர் துண்டமாக வெ
குண்டு மடிந்திட குண்டுகள் பட்டது (பஞ்)

படைக்கலத்தினால் அடக்கலாமென
மடக்கருத்துடன் நடக்கலாமென (பஞ்)

படுக்கவைத்து கைமடக்கி வைத்துடல்
நடுக்கமுற நகத்தூசி குத்தின (பஞ்)

நடுக்கமஞ்சிட, துடிக்க நெஞ்சினில்
இடுக்கனே செயும் துடிக்கவே கொலும் (பஞ்)

பங்க மிகுந்து பயங்கொள அத்தோ
அங்கு முறிந்து ரணங்கள் நிறைந்தது (பஞ்)

கற்புக் கரசிகள் பொற்பழிந்திட
கற்பழித்தது செப்பத்துயர் உறும் (பஞ்)

கண்ணீர் விட்டுக் கதறித் கதறித்
தண்ணீர் கேட்டுச் சாய்ந்து மடிந்தனர் (பஞ்)

தாயுந் தந்தையுஞ் சேயிழந்துமே
போர்க்களந்தனிலேயும் முன்னிட (பஞ்)

அஞ்சாப் பெரும் வஞ்சகன்
அறமுறை தவறிய கொடியவன் டயர் செய்த (பஞ்)

ஆயிரம் ஆயிரம் மக்களை டயர்கை
ஓடியும் மட்டும் சுட்டுக் கொன்று குவித்தான் (பஞ்)

தப்பிஓட வழியற்ற மக்களைத்
தயவு தாட்சண்யம் சிறிதும் இன்றி

துப்பாக்கியால் குண்டு தீரும் மட்டும்
சுட்டேன் சுட்டேன் சுட்டேன் என்ற
அற்பக் கொலைகாரனாம் பாவி டயர் தனக்கு
அளித்தார் வீரவாள் பரிசு இலண்டனில் (பஞ்)

ஏந்திளையாரிடச் சோலையுரிந்து
சாய்ந்திடவே வெகுகோரமிகுந்தது (பஞ்)

பிற தேயத்தார் கொடு மாயத்தால்
செய் அநியாயத்தால் உயிர் மாயச் செய்தது (பஞ்)

இந்தியர்கள் வருந்தி அலைந்திட
நொந்து கலங்கிட அந்தோ செய்தது (பஞ்)

ரத்த ஆறு பெருக்கெடுத் தோடிட
சித்ரவதையே மிகுந்திடச் செய்திட (பஞ்)

தேச நேச விஸ்வாசன் பாஸ்கர
தாசன் ஓதினேன் மோசம் மோசமே (பஞ்)

பஞ்சாப் கொடுமை

கொடுமை கொடுமை கொடுமையே பஞ்சாபில் நடந்த
கொடுமை கொடுமை கொடுமையே (கொடுமை)

கடுமையான ராணுவச் சட்டம்
கஷ்டமான தென்பது திட்டம்
அடிமையாக வாழவா இஷ்டம்?
அநியாய மாகவே அவதிப் பட்டோம் (கொடுமை)

நிருவாணமாய்ப் பெண்களை நிறுத்தி
நினைக்க முடியா அவமானப்படுத்தி
நெஞ்சால் கடத்தி வீதி கிடத்தி
நிமிரச் சவுக்கால் அடித்தான் துரத்தி (கொடுமை)

பட்டோம் பட்டோம் துயராமன்றே
பார்லிமென்டார் கூப்பிட நின்றோம்
சுட்டேன் சுட்டேன் சுட்டே னென்றான்
சுடு மருந்துள்ள மட்டும்
சுட்டே னென்றான் (கொடுமை)

பூமி பாலகதாஸ்

வெள்ளையரை எதிர்த்து விஸ்வநாததாஸின் முழக்கங்கள் தொடர்ந்து ஒலித்தன. பூமி பாலகதாஸ் எழுதி, விஸ்வநாததாஸ் பாடிய இன்னொரு பாடல் இதோ . . .

ஆங்கிலப் பேய்கள்

ஆங்கிலப் பேய்களெல்லாம்
திரண்டு கொண்டாடுது லண்டனிலே (ஆங்)

ஓங்கும் சுயாட்சிப் படைகண்டு
திமிர்வெறி ஏறுது மண்டையிலே (ஆங்)

டயரென்ற பேர்படைத்த ஒரு பேய்
டம்பமாய்ப் பேசு தங்கே
பயரென்ற உத்தரவைச் சர்ச்சில் பேய்ப்
போட்டு மிரட்டு திங்கே (ஆங்)

லாயிட் ஜார்ஜ் எனும் ஒரு பேய்
லண்டனை ஆட்டிப் படைக்குதங்கே
பாரெட்டுத்திக்கும் போற்றும் மகாத்மாவைப்
பார்த்தே நடுங்குதிங்கே (ஆங்)

வந்தே மாதரமென்னும் பேரொலி
வானைப் பிளக்குது பார் அந்த
மந்திரத்தைக் கேட்டு வெள்ளைப்பேய்
மருண்டே ஓடுதுபார்* (வந்)

ஜேம்ஸ் ஜார்ஜ் சுமித்நீல்

ஸ்காட்லாந்தில் பிறந்த ஜேம்ஸ் ஜார்ஜ் சுமித்நீல் (James George Smithy Neill) *1857 இந்திய சுதந்திரப் பெரும் போரில் 'தாக்குங்கள், அழியுங்கள்' என்று ஆங்கில வீரர்களுக்கு கட்டளையிட்டு, இந்திய சுதந்திரப் போராட்ட தீரர்கள் பலரைத் தூக்கிலிட்டும், தீக்கிரையாக்கியும் கொன்று குவித்தவன். இரத்த வெறி கொண்ட நீலன் குறித்து விஸ்வநாததாஸ் தனது நாடகங்களில் பாடிய பாடல் இதோ . . .*

---

* காங்கிரஸ் நூற்றாண்டு மலர் 1885 – 1985, சென்னை, ப. 264.

கெருவம் மிகுந்த நீலன்

கெருவம் மிகுந்த நீலன் மகாக்
கேவலக் கொடுங்கோலன் – அவன்

உருவத்தை இந்த ஞாலம்
உடைத் தெறிவது தான் சீலம் (கெ)

தருமம் மிகுந்த சென்னையில்
சண்டாள னான நீலனின் சிலை

நிரந்தரமாய் நிற்பதோ? இந்
நிலையை நாம் சகிப்பதோ? (கெ)

தொகையறா

ஆயிரத்தி எண்ணூற்றி ஐம்பத்தி ஆறாம்
ஆண்டு ஜூன் மாதம் நான்காம் தேதி

ஸ்ரீ காசிக் கிளர்ச்சிக்குப் பின் ஜெனரல்
நீலன் இரத்த வெறித் திமிர் மீறியே

தூயகுணச் சீக்கியர் வாழ் கிராமமெங்கும்
வெள்ளைத் துருப்புகள் தமை யேவினான்

நாயென்றும் சேயென்றும் தள்ளாத கிழவரென்றும்
தயவு தாட்சண்ய மின்றியே (கெ)

தாக்கிப் பல நூறு உயிர்களைப் போக்கிப்
பல பேர் உடலைச் சாலை மரக்கிளைகள் தோறும்

தூக்கிலிட்டே மாட்டித் தொங்கவிட்டும்
பலரைத் துரத்தித் துரத்திக் கொன்றும்

தீக்கிரையாய் ஆக்கிச் சொல்லும் திசையனைத்தும்
பிணக்காடாய்ச் செய்தான் – அந்தப்

போக்கிரிக்குச் சிலையெடுத்துப்
போற்றுவதை இந்தியர் நாம் பொறுக்கலாமோ? (கெ)

தணியாக் கொலைவெறி கொண்டவன்
தயை தாட்சண்யம் இல்லாதவன்

மனிதாபிமான மற்றவன் பல
மக்கள் உயிரைப் பறித்தவன்

துணிவோடு ஒன்று கூடுவோம் அவன்
துரோகச் செயலைச் சாடுவோம்

அநியாயக்காரன் சிலைதனை
அடியோடு நொறுக்கிப் போடுவோம்(செ)

கதர்க்கப்பல்

காந்தியடிகளின் புகழ் பாடும் விஸ்வநாததாஸின் 'கதர்க் கப்பல்' பாடல் இதோ . . .

பல்லவி

கதர் கப்பல் கொடி தோணுதே
கரம் சந்த்ர மோகனதாஸ் காந்தி இந்தியா சுதேச (கதர்)

அனுபல்லவி

அதற்கப்பால் ஞானகாசம்
அதிலே பாரதவாசம்

இதற்குள் சிவப்ரகாசம்
இனி நமக்குச் சந்தோசம் (கதர்)

சரணம்

மானிடச் சிப்பிக் குள்ளே
மகாத்மா ஓர் முத்துப் போலே

ஞான வடிவம் கொண்டு
நம்மைக் காக்க வந்த தாலே (கதர்)

லௌகீகம் விட்டால்
வைதீகம் பெற்றால்

மெய்தேகம் நாம்
நன்றாய்க் கொள்வோம் நாகரீகம் (கதர்)

பஞ்சத்தைப் பஞ்சால் வெல்வோம்
படையை உடையால் கொல்வோம் (கதர்)

வஞ்சத்தை விட்டகல்வோம்
மறை நேர்க்கும் இந்த
முறையேற்கும் மகாத்மா
உரைகாக்கும் நம்
மனைமக்கள் மானங் காக்கும் (கதர்)

தேசபக்தி வேண்டுகோள்

விஸ்வநாததாஸ் பாடிய இன்னொரு தேசபக்திப் பாடல் இதோ . . .

இராகம் - இந்துஸ்தானி - தோடி

பல்லவி

தேசாபிமானிகளே – உண்மைத் தெய்வீகஞானிகளே – தமிழ
பாஷாபிமானிகளே – ஜென்மப் பாரத தியானிகளே (தே)

மகுடம்

தீதற்றிடு தாதாபாய்மந்திர மீதுற்றிடு மாதாரத்தந்திர; (தே)
திலகப் பிரபுக்கருமை பணிவிடை உலகில் நல்பெருமை கென தடை (தே)

ஜெகத்தில் மிகுத்த சுகத்தை வகுத்த – (தே)

மகத்வமனைத்தும் பறிக்கச் சகித்த . . . (தே)

தியாகனம் யூகமே நிரம்பிய

யோகனம் கோகலேவிரும்பிய (தே)

கெஜல்

ஆசாரம் தனைவிடுத்து ஆங்கிலத்தைப் படித்தோம்
அயல் நாட்டு நடையுடையை
ஆசையுடன் பிடித்தோம்
கூசாமல் மது வகையைக் குடல் நிறையக் குடித்தோம்
கொடியவருடன் கைகோத்துக்
குளிர்நிலவில் நடித்தோம்
நேசானு பூதி தெய்வ நிந்தனையில் தடித்தோம்
நெஞ்சாரப் பொய்யுரைத்து
நீதி மன்றை யிடித்தோம்
காசாசையால் பலதுற் காரியங்கள் முடித்தோம்
கடையரென்றே நம்மில் சிலரைக்
கடிந்து விழுந்தடித்தோம்

பாட்டு

கண்டதே சாட்சி கொண்டதே கோலம்
என்றிது நாள் கழித்தோமே
கைத்தொழில் வர்த்தக யுக்த முறைத்துறை
காணாமல் விதித்தோமே (தே)

விஸ்வநாததாஸ் ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை குறித்து பாடிய பாடல் இதோ ...

தாழ்த்தப்பட்ட சோதரர்

பல்லவி

தாழ்த்தப்பட்ட சோதரரைத் தாங்குவாருண்டோ?
தாங்குவாருண்டோ? மண்ணில் ஒங்குவாருண்டோ? (தா)

அனு பல்லவி

வீழ்த்தப்பட்டு வாடுகின்றார்
வெம்பியே திண்டாடுகின்றார்
பாழ்த்தமனப் பாவியர்செய் பாதகத் தாலே
பாதகத் தாலே இத்த மேதினி மேலே (தா)

தொகையறா

இருக்கவும் இடமில்லை நிற்கவும் நிழலில்லை
என நொந்து வாடியழுறார்
இல்லமொன்றில்லாது அல்லலே வடிவமாய்
ஏங்கியே ஏங்கி விழுறார்
நெருக்கவும் பண்ணையார் குடிக்கவும் நீரின்றி
நிட்டுரத்தால் கதறுறார் – கொஞ்சம்
நெஞ்சிரக்கமில்லா வஞ்சகக் கொடியரை
நினைந்துதான் பதறுறார்
சுருக்கவும் உடம்பினைப் பெருக்கவும் வியர்வை நீர்
கஷ்டக் கண்ணீர் வடிக்கிறார் – அவர்கள்
காலமெல்லாம் உழைத்திங்குக் கூலி பெறமாட்டாது
கலங்கி நித்தமும் துடிக்கிறார்
இருக்கவும் பொறிகள் போல் அடக்கவும் உணர்வினைத்
தீயவர்களால் நலிகிறார்
செத்திடவு மொண்ணாது நித்தமும் அடிமைகளாய்த்
தீண்டாமையால் நலிகிறார்

அனுபல்லவி எடுப்பு

பள்ளுப் பறையரென்னும் பாமரரைக் காக்கவென்னும்
கொள்கையிலும் புண்ணியந்தான் குவலய மீது
குவலய மீது வேறு கூறுவிரேது (தா)

வள்ளி திருமணம்

*சங்கரதாஸ் சுவாமிகளால் எழுதப்பட்ட நாடகங்களில் முதன்மையானது வள்ளி திருமணம். இந்நாடகத்தின் முதற்பதிப்பு 1897-இல் வெளிவந்தது. தமிழில் வள்ளி திருமணம் நாடகத்தைப் பல புலவர்களும், நாடக ஆசிரியர்களும் எழுதியிருக்கின்றனர்.**

விஸ்வநாததாஸ் நடத்திய நாடகங்களுள் மிக முக்கியமானது வள்ளி திருமணம் நாடகமாகும். வள்ளி திருமணம் நாடகத்தில் வள்ளியாக நடிக்கும் பெண் தானிய கதிர்களைத் தின்ன வரும் பறவைகளை விரட்டக் கவண் கல் எறியும்போது ஆலோலம் பாடுவாள். அப்போது வேடனாக நடிக்கும் விஸ்வநாததாஸ் தானும் பறவைகளை ஓட்டுவதற்காக அதே ஆலோலப் பாடலில் வரும் முதலிரண்டு அடிகளை மட்டும் பாடிவிட்டுத் திடீரென்று 'கொக்குப் பறக்குதடிப் பாப்பா' பாடலைப் பாடிடுவார். இதோ மதுரகவி பாஸ்கரதாஸ் எழுதிய அந்தப் பாடல் . . .

கொக்குப் பறக்குதடி பாப்பா

கொக்குப் பறக்குதடி பாப்பா நீயும்
கோபமின்றிக் கூப்பிடடி பாப்பா . . . (கொ)

கொக்கென்றால் கொக்கு நம்மைக்
கொல்ல வந்த கொக்கு
எக்காளம் போட்டு நாளும் இங்கே
ஏய்த்துப் பிழைக்குதடி பாப்பா . . . . (கொ)

வர்த்தகம் செய்ய வந்த கொக்கு நமது
வாழ்வைக் கெடுக்க வந்த கொக்கு
அக்கரைச் சீமை விட்டு வந்து . . . கொள்ளை
அடித்துக் கொழுக்குதடி பாப்பா. . . . (கொ)

தேம்ஸ் நதிக்கரையின் கொக்கு அது
தின்ண உணவில்லாத கொக்கு பொல்லா
மாமிச வெறிபிடித்த கொக்கு இங்கே
வந்து பறக்குதடி பாப்பா. . . . (கொ)

கொந்தலான மூக்குடைய கொக்கு அது
குளிர்பனி கடல் வாசக் கொக்கு

---

* ஏ.என். பெருமாள், தமிழ் நாடகம் ஓர் ஆய்வு, சென்னை, 1979, ப. 390.

அந்தோ பழிகாரக் கொக்கு நம்மை
அடக்கி ஆளுதடி பாப்பா. . . . (கொ)

மக்களை ஏமாற்ற வந்த கொக்கு அதன்
மமதை அழிய வேண்டும் பாப்பா
வெட்க மானமில்லா அந்தக் கொக்கு இங்கே
மடியப் பறக்குதடி பாப்பா. . . . (கொ)

பஞ்சாபில் படுகொலை செய்த கொக்கு அது
பழிபாவம் பார்க்காத கொக்கு
அஞ்சாமல் பாஸ்கரன் தமிழ்பாடி அதை
அடித்து விரட்ட வேண்டும் பாப்பா. . . . (கொ)

நெல்லை கணபதி அரங்கில்

நெல்லை கணபதி அரங்கில் வள்ளி திருமணம் நாடகத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. வழக்கம் போல் காவல் துறை அதிகாரிகள் கையில் பிடியாணையுடன் வந்திருந்தனர்.

தன்னைச் சிறைப்படுத்தக் காவல்துறை வந்திருப்பதை அறிந்த விஸ்வநாததாஸ் சிறிதும் அஞ்சவில்லை. நாடகத்தில் பறவைகளை விரட்ட வள்ளி ஆலோலம் பாடி முடிப்பதற்குள் வேடன் வேடத்தில் வந்த விஸ்வநாததாஸ் 'கொக்குப் பறக்குதடி பாப்பா - நீயும் கோபமின்றிக் கூப்பிடடி பாப்பா' எனக் கணீரென்று பாடினார். இடி முழக்கமென அரங்கமே அதிர்ந்தது. கொட்டகைக்குள் நாடகம் பார்த்துக் கொண்டிருந்த காவல்துறை அதிகாரி வேகமாக மேடைக்குச் சென்று 'ஆங்கில ஆட்சிக்கு எதிராகப் பாட்டுப் பாடியதால் உங்களைக் கைது செய்ய வந்துள்ளோம். பிடியுங்கள் வாரண்டை' என்றார்.

'யாருக்கு வாரண்டு?

விஸ்வநாததாஸ் என்பவரான உங்களைக் கைது செய்யவே வாரண்டு.'

'அடடா . . அப்படியா இப்போது நான் அந்த விஸ்வநாததாஸ் இல்லை. நான் முருகன். வேடன் ரூபத்தில் வந்திருக்கிறேன். முருகப் பெருமானைக் கைது செய்ய அவர் பெயருக்கு வாரண்டு இருந்தால் கொண்டு வாருங்கள். இல்லையேல் நாடகம் முடிந்து வேடத்தைக் கலைத்ததும் வந்து கைது செய்யுங்கள். அதுவரை அமைதியாக இருந்து நாடகத்தைப் பாருங்கள்' என்றார். பதில் கூற முடியாமல் காவல்துறை அதிகாரி தன் இருப்பிடத்திற்குச் சென்றார்.

அதே காவல்துறை அதிகாரி நாடகம் முடிந்ததும் முருகன் வேடத்தைக் கலைத்துவிட்டு வந்த விஸ்வநாததாசிடம் அதே பிடியாணையை நீட்டியபோது, ‘நான் எப்பொழுது ஆட்சியாளர்களை எதிர்த்துப் பாடினேன்?’ எனக் கேட்டார். அதற்குக் காவல்துறை அதிகாரி ‘நீங்கள் தானே முருகக்கடவுளாக வேடன் ரூபத்தில் வந்து பாடினீர்கள்’ என்றார்.

‘என்ன கொடுமை! நாடகத்தில் முருகப்பெருமான் வேடனாக வந்து பாடியதற்கு விஸ்வநாததாஸ் பெயருக்கு வாரண்டா? வேடத்தைக் கலைத்துவிட்டு இப்போது நான் விஸ்வநாததாசாக இருக்கும்போது முருகப் பெருமானாக வந்து பாடிய பாட்டிற்காக என்னைக் கைது செய்வது எப்படிச் சரியாகும்? சட்டம் தெரியாமல் ஆட்சி செய்வதுதான் உங்கள் நீதியா?’ எனக் கேட்டார். என்றாலும் காவலர்கள் விடவில்லை. கைது செய்து வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக்கில் இவருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார்.

தமிழ்நாடு முழுவதும் விடுதலைப் போரினைக் காங்கிரஸ் பேரியக்கம் தீவிரமாக நடத்திக் கொண்டிருந்தது. வெள்ளை அரசாங்கம் தனது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டு ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தது. மேடைக்கு வரும் முன்பாகவே விஸ்வநாததாசைக் கைது செய்துவிட வேண்டுமென்று காவல் துறை திட்டமிட்டது. அவர் எங்கே இருக்கிறாரென்று தெரியாமல் காவலர் திண்டாடினர். இரவு வந்தது; நாடக அரங்கு நிறையத் தொடங்கியது. அவரைக் கைது செய்வதற்குக் காவலர் விழிப்போடு காத்து நின்றனர்.

கூலிக்காரன் போல

விஸ்வநாததாசின் தம்பியான சண்முகதாஸ் ஆர்மோனியத்தோடு மேடையில் அமர்ந்ததும், ‘விஸ்வநாததாஸ் எப்படியும் வந்துவிடுவார். அவர் வருகையைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். நேரமும் அதிகமாகிக் கொண்டு வருவதால் தாசின் மகன் சுப்பிரமணியதாஸ் நடிப்பார். அனைவரும் அமைதியாக இருந்து ஆதரவு தர வேண்டுகிறோம்.’ என்று கூறி மக்களை நம்பச் செய்தார். காவல் துறையினரும் ‘தலைவலி விட்டது’ என நிறைவடைந்தனர். தாசின் மேக்கப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஒரு கூலிக்காரன் காவலர்களுக்கிடையே புகுந்து வந்தான். நாடகம் தொடங்கியது.

வள்ளி திருமணம் நாடகத்தில் வேலனின் உரையாடலையும் பாட்டையும் கேட்ட மக்கள் ‘தந்தையைப் போலவே

மகனுமிருக்கிறானே' என ஆச்சரியப்பட்டனர். அடுத்து வள்ளியைச் சிறையெடுக்க முருகப்பெருமான் வேடனாக வர வேண்டும் . . .

வேடன் வந்தான். அதில் தான் பேச வேண்டிய உரையாடல், பாடலைப் பாடினான். திடீரென்று தேசியப் பாடல்களைப் பாடத் தொடங்கினான். அவ்வளவுதான் . . . அரங்கமே அதிரும்படிக் கையொலி எழுப்பியது.

காவலர் குழம்பிவிட்டனர். பாடுவது தாசா? அவருடைய மகனா? என மக்கள் புருவத்தை உயர்த்தினர். ஒருவருக்கொருவர் விசாரித்துக் கொண்டனர். மக்களின் குசு குசு பேச்சை உன்னிப்பாகக் கேட்ட காவலர்கள் உறுதி செய்து கொண்டு விஸ்வநாததாசைக் கைது செய்தனர்.

அதன் பிறகு தான் கூலிக்காரன் போல் பெட்டியைத் தூக்கிக் கொண்டு காவல் வளையத்துக்குள் புகுந்து வந்தது விஸ்வநாததாசென்று மக்கள் புரிந்து கொண்டனர்.*

வடலிவிளை வீரச்செம்புலி (ஜெம்புலிங்கம்)

தெய்வ அருளும், தேசபக்தியும் கொண்ட விஸ்வநாததாஸ் நெல்லை மாவட்டம் திருக்குறுங்குடியில் நாடகத்தில் நடிக்க வருகிறார் என்ற செய்தியறிந்ததும் ஏழைகளின் ஒரு தலைவனாகவும், கொள்ளைக்காரனாகவும் விளங்கிய வடலிவிளை வீரச்செம்புலி (ஜெம்புலிங்கம்)** நாடகம் பார்க்க வருவதாகச் செய்தி சொல்லியனுப்பினார். சொல்லியது போலவே முன் வரிசையிலும் வந்து அமர்ந்து இருந்தார். அப்போது ஜெம்புலிங்கமோ தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார். எந்த நேரமும் அவர் காவலர்களால் கைது செய்யப்படலாம் என்ற நிலை. விஸ்வநாததாசைப் பிடிப்பதற்காக நாடக அரங்கு முழுவதும் காவல்படை குவிந்திருந்தது. இந்த நிலையிலேயும் பயப்படாமல் நாடகம் காண வந்திருக்கும் ஜெம்புலிங்கத்தை மானசீகமாகப் போற்றினார் விஸ்வநாததாஸ்.

அந்த மேடையில் 'தேசாபிமானிகளே உண்மைத் தெய்வீக

---

* மு. செல்லப்பன், வீரத் தியாகி விஸ்வநாத்தாஸ், பக். 15 – 19.

** பாளையங்கோட்டை S.A. அளகிரிசாமி பாகவதர் எழுதிய செம்புலிங்க நாடார் மாண்டு போன அலங்கோலச் சிந்து (1923) ஏமி கார்மிக்கேல் அம்மையார் எழுதிய 'Raj The Brigand Chief' யூ. ஹாப்கின்ஸ் (Hugh Hopkins) (1956) எழுதிய செம்புலிங்கம் கதை என்.ஏ. வேலாயுதம் எழுதிய புரட்சி வீரர் மூவர் (1978), தாமரை செந்தூர்பாண்டியின் வடலிவிளை செம்புலிங்கம் (1995) நூலிலிருந்து இவரது வரலாற்றை விரிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஞானிகளே' என்று தொடங்கும் அந்தப் பாடலில், (இந்த நூலில் பக்கம் 24-இல் உள்ளது) சில வரிகளை ஜெம்புலிங்கத்துக்காகவே பாடி 'உங்களுடைய திறமையை நாட்டு விடுதலைக்கு பயன்படுத்தக் கூடாதா?' என்ற ஏக்கத்தை வெளிப்படுத்தினார் விஸ்வநாததாஸ்.

தன்னைக் குறித்துத்தான் விஸ்வநாததாஸ் இவ்வாறு பாடுகிறார் என்பதைத் தெரிந்து கொண்ட ஜெம்புலிங்கம் மேடைக்குப் பின்புறமாக விஸ்வநாததாசை அழைத்தார். அவரைக் கட்டித் தழுவினார். நாத்தழு தழுக்க 'உங்கள் பாட்டு தேனாய் இனித்தது. என் நெஞ்சை நெகிழ வைத்து விட்டது. உங்கள் அறிவுரை நியாயமானது தான். ஆனால் என்னைப் பொறுத்த மட்டில் காலம் கடந்து விட்டது' என்று கூறிவிட்டு மறைந்து விட்டார்.*

எட்டயபுரம் – சேத்தூர் ஜமீன்தார்கள்

எட்டயபுரம் ஜமீன்தார் உதவுவதாகச் சொன்னபோதும், சேவற் சண்டையால் வெற்றி பெற்ற தன் சேவலுக்காக சேத்தூர் ஜமீன்தார் தனது ஷெவர்லட்காரையேத் தர முன்வந்த போதும் பொன்னையும் பொருளையும் கண்டு மயங்காத கொள்கை தீரர் விஸ்வநாததாஸ்.

தேசபக்தச் செம்மல் வ.உ.சி.

காங்கிரஸ் இயக்க நிதிக்காக எங்கு யார் யார் அழைத்தாலும் தனது சகாக்களுடன் வந்து வசூல் செய்து கொடுப்பார் விஸ்வநாததாஸ்.

விஸ்வநாததாசின் நாடகம் மாலையில் நடக்கும்; இரவில் இவர் கைது செய்யப்படுவார். மறுநாள் நீதி மன்றத்தில் நிறுத்தப்படுவார். அபராதத்திற்கு மேல் அபராதம் விதிக்கப்படும். அபராதத்தைக் கட்டாமலே சிறைக்குச் செல்வார். ஆனால் இவர் நண்பர்களோ அபராதத் தொகையைக் கட்டி இவரை மீட்டு வருவார்கள். ஒரு நாள் நாடகம்; ஆறு மாதம் சிறையென்று இவர் வாழ்க்கை தொடர்ந்தது. அடிக்கடி இவர் மீது அரசத் துரோக வழக்குகள் தொடரப்பட்டன.

ஒரு சமயம் விஸ்வநாததாஸ் மீது அரசத் துரோகக் குற்றம் சாட்டித் திருநெல்வேலி மாவட்ட நீதிபதி முன் வழக்கு ஒன்று

---

* கவிஞர் மதிமாறன், நாட்டுணர்வு ஊட்டிய நடிகவேள் தியாகி விசுவநாததாஸ், சென்னை, 1985, பக். 7, 8.

நடந்தது. விஸ்வநாததாசுக்காக வழக்காட தேசபக்தச் செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. வந்திருந்தார். விஸ்வநாததாஸிற்காக கோர்ட்டில் வ.உ.சி. வழக்கறிஞராக வாதாடினார் என்று ந. சோமயாஜுலு தெரிவித்துள்ளார்.*

பசும்பொன் தேவர் திருமகனார்

விருதுநகர் மாவட்டம் கன்னிசேரியில் கிராம காங்கிரஸ் கமிட்டி சார்பில் பொதுக்கூட்டம். வீரத்தியாகி விஸ்வநாததாசை வைத்துக் கூட்டம் ஒன்று நடப்பதாயிருந்தது. ஆனாலும் 'எங்கள் சரகத்தில் உங்கள் கூட்டமே நடக்கக் கூடாது' என்று காவலர் தடுத்து விட்டனர்.

ஊர் மக்கள் விஸ்வநாததாசிடம் சென்று முறையிட்டனர். அவர்களிடம் கூட்ட ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லிவிட்டுப் பசும்பொன் தேவர் திருமகனாரை அழைத்துக் கொண்டு கன்னிசேரி சென்றார் விஸ்வநாததாஸ். ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது. இருவரும் வீர முழக்கம் செய்தனர். திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தைக் கண்டு காவல் துறை ஒதுங்கிப் பதுங்கிக் கொண்டது.**

இராமநாதபுரத்தில்

இராமநாதபுரத்தில் நாடகத்திற்குத் தடை விதித்தார்கள். நாடகத்தைக் காணச் சுற்றுப்புறச் சிற்றூர்களிலிருந்தெல்லாம் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடிவிட்டனர் . . . நாடகம் இல்லையென்றால் மக்கள் ஏமாந்து போய்விடுவார்களே!

நாடகத்துக்குத் தானே தடை; விஸ்வநாததாசுக்கு இல்லையே! அத்தனை மக்களையும் அரண்மனைக்கு முன்புறள்ள திடலில் கூடச் செய்தார். அந்தப் பெரிய கூட்டத்தில் புரட்சிப் பாடல்களைப் பாடினார்.

மக்கள் மகிழ்ந்தனர். ஆனால் காவலர்கள் தாசைக் கைது செய்து சிறைக்கனுப்பினர். இதைக் கேள்விப்பட்டுப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெருமகனார் அவர்கள் துடித்துப் போனார். ஜாமீனில் எடுக்க முயன்றார். விஸ்வநாதாஸோ ஜாமீனில் வெளிவர மறுத்துத் தண்டனையை அனுபவித்து விட்டு வந்தார்.

---

* மதுரை மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு, திருநெல்வேலி, 1980, ப. 486.

** கவிஞர் மதிமாறன், முற்கூறிய நூல், ப. 12.

ஸ்ரீசுபாஷ் பாபு வாலிபர் சங்கம்

வங்கத்துச் சிங்கம் நேதாஜியின் பெயரில் 1938-இல் 'ஸ்ரீசுபாஷ்பாபு வாலிபர் சங்கம்' அமைத்து அதற்கு தலைமையேற்றுப் பணிபுரிந்தவர் விஸ்வநாததாஸ்.

இலங்கையில் நேரு

மறைந்த பாரதப் பிரதமர் பண்டிதர் நேருவின் தந்தை மோதிலால் நேரு 1931 பிப்ரவரி 6 அதிகாலையில் மறைந்தார். அதே ஆண்டு மே மாதத்தில் தனது மனைவி கமலா, மகள் இந்திராகாந்தியுடன் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்தார். அங்கு நுவரெலியாவில் (Nuwara Eliya) ஓய்விற்காகத் தங்கி இருந்தார்.* நேரு மனைவியுடனும் மகளுடனும் அமைதியாக எத்தகைய தொல்லையுமின்றி ஓய்வெடுத்துக் கொண்டது இதுவே முதல் தடவையாகும் என்று நேருவே எழுதியுள்ளார்.**

இரண்டாவது பயணம்

1939 ஜூலை 16 விமானத்தில் இலங்கைக்கு இரண்டாவது தடவையாக நேரு விஜயம் செய்தார்.*** கப்பலில் நேரு சென்ற முதல் பயணத்தின்போது நடைபெற்ற வரலாற்று நிகழ்வு இதோ . . .

அதே கப்பலில் தான் விஸ்வநாததாசும் தம் குழுவினரோடு இலங்கை சென்றார். நேரு பயணம் செய்த அக்கப்பல் தலைமன்னார் போய்ச் சேர்ந்தது. இலங்கை கப்பல் துறையினர் கப்பலைச் சுற்றி வளைத்தனர். விஸ்வநாததாசை நோக்கி 'நீங்கள் கப்பலை விட்டுக் கீழே இறங்கக்கூடாது. இந்த மண்ணில் உங்கள் கால் படுவதற்கு இலங்கை அரசு தடை விதித்திருக்கிறது. இதோ பாருங்கள்' எனத் தடையாணையைக் காட்டினர்.

'நேரு வருகிறார்களே! அவர் காங்கிரஸ் தலைவர். நான் வரக்கூடாதா? நான் காங்கிரஸ் தொண்டன் தான்' என விஸ்வநாததாஸ் சொன்னார். **'அவர் வருவதைப் பற்றிப் பிரச்சனையில்லை. நீங்கள் வந்தால் கொந்தளிப்பு ஏற்படும்; குழப்பம் உண்டாகும். வன்முறைகூட ஏற்படலாம். எனவே தான்**

---

* Jawaharlal Nehru, An Autobiography, London, 1949, p. 247.

** ஜவஹர்லால் நேரு, சுயசரிதை தமிழாக்கம் ஸ்ரீமதி ஜெயா அருணாசலம், சென்னை, 1957, ப. 283.

*** ஏ. அனந்த கிருஷ்ணன், இலங்கையில் நேருஜீ, 1939, வீரகேசரி பிரஸ், கொழும்பு, 1939, முன்னுரையில் . . .

இலங்கையரசு உங்களுக்குத் தடை விதித்திருக்கிறது' எனக் காவலதிகாரி தனது பிடியில் உறுதியாயிருந்தார்.

தலைமன்னார் வரை சென்ற விஸ்வநாததாசைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பியனுப்பிவிட்டது இலங்கை அரசு. இதையறிந்த இலங்கை காங்கிரஸ் தலைவர் ஜே.பி. கிறிஸ்டீனும், மேயர் குணசிங்கும் வழக்காடி வெற்றி பெற்று விஸ்வநாததாசை இலங்கைக்கு திரும்ப அழைத்தனர். பின்னர் மிகப்பெரிய வரவேற்பும் கொடுத்தனர். இலங்கை முழுவதும் சுற்றுப் பயணம் செய்து நாடகங்கள் நடத்தி, இந்திய விடுதலை முழக்கத்தையும் முழங்கி வெற்றியோடு திரும்பினார் விஸ்வநாததாஸ்.

பூமிபாலகதாஸ்

தேச பக்தர்களைத் தொடர்ந்து வளைய வளைய வரும் துப்பறியும் போலீசார் பற்றி அக்கால நாடக மேடைகளில் விஸ்வநாததாஸ் நகைச்சுவையாகப் பாடிய பாடல் வரிகள் இதோ . .

போலீஸ் புலிக்கூட்டம் – நம்மேல்
போட்டு வருகிறது கண்ணோட்டம் (போ)

அடிக்கடி நடைபெறும் வள்ளி திருமணம் நாடகத்தில் வள்ளி நாயகியாக நடிக்கும் பெண் தினைப்புனைக் காவல் செய்யும் காட்சியில் தினைப் பயிரைத் தின்ன வரும் பறவைகளைக் கையில் கவண் வைத்துக் கொண்டு ஆலோலம் பாடி விரட்டுவதாக அமையும் பாடலில் பறவைகள்ளை இழித்துப் பேசி விரட்டும் பாவனையில் எத்தனை லாவகமாக நம்மை அடிமைகொண்ட வெள்ளையர்களைப் பறவைகளுக்கு உவமை காட்டிப் பாடுவதன் மூலம் மக்களக்குச் சுதந்திர வேட்கையை மூட்டியவர் விஸ்வநாததாஸ்.

புராண காலத்திய வள்ளி பறவைகளை மட்டும் விரட்டவில்லை. இந்திய நாட்டின் சுதந்திரத்தையும், செல்வத்தையும் கொள்ளையிட வந்திருக்கும் வெள்ளையர்களையும் கவண் வீசி விரட்டுகிறாள். இது நாடக இலக்கணத்திற்குப் பொருந்துமா, என்றெல்லாம் அந்தக் கால நடிகர்களோ ரசிகர்களோ நினைப்பதில்லை. மாறாக சுதந்திர உணர்ச்சியின் காரணமாக, ரசிகர்கள், உற்சாகத்துடன் கைதட்டி ஆரவாரம் செய்து, மீண்டும் மீண்டும் ஒன்ஸ்மோர் கேட்பார்கள். இந்த உற்சாகம் நகைச்சுவை நடிகனுக்கும் ஏற்படும். அவன் வெள்ளையர்களுக்குத் துணைபுரியும் கறுப்பர்களை காக்காய்க் கூட்டத்துக்கு உவமை காட்டிப் பாடுவான்.

பூமி பாலகதாஸ் எழுதிய அந்த அற்புதமான பாடலைப் பாருங்கள்.

காக்கா பாட்டு

காக்கா காக்கா கடைகெட்ட காக்கா
காக்கரட்டைக் காயைப் போலே மூக்கெடுத்த காக்கா (கா)
ஒங்க, வீட்டுமேலே கடலுண்டு காக்கா – அது
வெள்ளைக் கொக்கு செய்த மாயம் காக்கா – மேல்
நாட்டு மோகங்கொண்டு அலையும் காக்கா – சொந்த
நாட்டுச் சகோதரரைக் காட்டிக் கொடுத்துவரும் (கா)

காத்தாய் பறக்கிறாயே காக்கா – மகாத்மா
காந்தி சொன்னபடி கேளு காக்கா – வந்த
மாற்றானுக்கு இடங்கொடுத்த காக்கா
மண்டையிலே மூளையின்றி
சண்டையிட்டுக் கெட்டழியும்* (கா)

எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் அவர்கள் மிகச் சிறந்த தேசபக்தர். அவர் நடித்த நாடகங்களில் எல்லோரையும் போல் வெல்வட் ஜம்கி உடைகளை அணியாமல் கதர் உடைகளையே தரித்தார். இவர் மேடையில் தோன்றும் போதெல்லாம் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து தேசீயப் பாடல்களைப் பாடுமாறு கேட்பார்கள். போலீசார் குறுக்கிட்டுத் தேசீயப் பாடல்களைப் பாடக்கூடாதென்று தடைவிதிப்பார்கள். தடையை மீறித் தேசியப் பாடல்களைப் பாடி அடிக்கடி தண்டனை பெற்றுச் சிறை புகுவதும், விடுதலையானதும் மீண்டும் பாடுவதும் சிறைக்குப் போவதும் வழக்கமாகிவிட்டது.

'ஆதியிலும் பறையனல்ல', 'மீசையுள்ள ஆண் பிள்ளைச் சிங்கங்கள்', 'கரும்புத் தோட்டத்திலே' 'இந்து நேச வங்கதேச பந்துவை இழந்தனம்' போன்ற பாடல்களைப் பாடி எழுச்சியை ஏற்படுத்தியவர் விஸ்வநாததாஸ்.

மற்போர்வீரர் விஸ்வநாததாஸ்

சொற்போரில் சிறந்து விளங்கியதைப் போல், விஸ்வநாததாஸ் மற்போரில் ஆர்வமுள்ள வீரராயிருந்தார். மற்போர் பயிற்சிகளையும் தானே ஏற்பாடு செய்தார்.

* கு.சா. கிருஷ்ணமூர்த்தி, தமிழ் நாடக வரலாறு, சென்னை, 1979, பக். 137 – 138.

பஜ்லுதின்பயில்வான்

வடநாட்டைச் சேர்ந்த பஜ்லுதின் பயில்வான் திருமங்கலத்திற்கு வந்தபோது தனது சொந்த பராமரிப்பில் சில மாதங்கள் அவரை வைத்து, தனது ஊரில் மற்போர் பயிற்சி அளித்தவர் விஸ்வநாததாஸ். திருமங்கலத்தில் பரமன் பயில்வான், வேங்கன் செட்டியார் பயில்வான் போன்றவர்கள் மற்போர் புரிவதை ஆர்வத்துடன் கண்டுகளிப்பவர் விஸ்வநாததாஸ். சேவல் சண்டையும், கிடாய்ச் சண்டையும், கௌதாரிச் சண்டையும் நடைபெறும். அவைகளையும் கண்டு ரசிப்பார் விஸ்வநாததாஸ்.

S.S. சண்முகதாஸ்

ஒரு முறை விஸ்வநாததாஸ் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த அதே நேரத்தில், எந்த மேடை அவரைச் சிறைக்கு அனுப்பியதோஅதே மேடையில் மூத்த மகன் சுப்பிரமணியதாசும் தங்கை மகன் T.M. சின்னச்சாமியும் ஏறினார்கள். எந்தெந்தப் பாடல்கள் விஸ்வநாததாசைச் சிறைக்கு அனுப்பினவோ அந்தப் பாடல்கள் அனைத்தையும் பாடினார்கள். தம்பி எஸ்.எஸ். சண்முகதாஸ் இவர்களுக்குப் பக்க பலமாயிருந்து ஆர்மோனியம் வாசித்தார். இவர் பெரிய ஹார்மோனிஸ்ட். அருமையான தேசியகீதங்களைத் தனது வாத்தியத்தின் மூலம் பாடிப் பரப்புவார். காங்கிரஸ் முன்னேற்றத்திற்கான சகல காரியங்களையும் செய்வதற்கு முந்துவார். விஸ்வநாததாஸைப் போலவே தானும் பல இடங்களில் நாடகங்களில் சேவை செய்து காங்கிரஸ் நிதிக்கு பெருமிதமாக உதவியுள்ளார்.*

குடும்பமே கொடுஞ் சிறையில்

சுப்பிரமணியதாசுக்கு ஆறு மாதச் சிறைத் தண்டனையும் இரு நூறு ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அவர் மதுரைச் சிறைக்கு அனுப்பப்பட்டார். சின்னச்சாமியைத் திருச்சிச் சிறைக்கு அனுப்பினார்.

தந்தையோ வேலூர்ச் சிறையில் மகனோ மதுரைச் சிறையில். மருமகன் திருச்சி சிறையில். இப்படி இவர் குடும்பமே நாட்டு விடுதலைக்காகத் தங்களை முழு மனத்தோடு ஈடுபடுத்திக் கொண்டது. அப்பா, அண்ணன், மாமா அனைவரும் சிறையிலே இருக்கும்போது அவனால் மட்டும் வெளியிலே சும்மாயிருக்க

---

* மதுரை ஜில்லா தியாகிகள் மலர், ப. 164.

முடியுமா? ஆமாம் ... எட்டு வயதே நிறைந்திருந்த விஸ்வநாததாசின் இரண்டாவது மகன் காசிநாதன் அந்நியத் துணி எரிப்பிலும் கள்ளுக்கடை மறியலிலும் கலந்து கொண்டார்.

கே.பி. சுந்தராம்பாள்

தேசியப் பாடல்கள் பாடும் கொடுமுடி கோகிலம் கே.பி. சுந்தராம்பாள், செங்கோட்டை S.G. கிட்டப்பா இருவரையும் கைது செய்ய வெள்ளையர் அரசு முயன்றது. சிலரின் முயற்சியால் வழக்கை கோர்ட்டுக்கு கொண்டு போகாமல் முடித்துக் கொண்டார் என்று குறிப்பிட்டுவிட்டு, எழுதுகிறார் பாஸ்கரதாசன். **'பின்னாளில் நடந்த நாடக விளம்பரங்களில் தேசியப் பாடல்கள் பாட மாட்டாது'** *என்று விளம்பரப்படுத்தப்பட்டது.* **அப்போது காங்கிரசில் தீவிரமாக இருந்த பிரபல நடிகரும் பாடகருமான விஸ்வநாததாஸ் தடையை மீறிப் பாடியதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் வாடினார்.**[*]

கே.பி. ஜானகி அம்மாள் (1917 – 01.03.1992)

மதுரை பத்மநாபன் - லட்சுமி அம்மாளின் புதல்வி கே.பி. ஜானகி. அருமையான குரல் வளம். அறுபதாண்டுக்கால அரசியல் வாழ்வு. கலைத்துறை பணி மகத்தானது. 1941-இல் பாதுகாப்புச் சட்டப்படி தென்னிந்தியாவில் கைது செய்யப்பட்ட முதல் பெண்மணி.

மருத்துவ குலத்தில் பிறந்த விஸ்வநாததாசோடு இணைந்து நடிக்க பல நடிகையர் மறுத்த காலத்தில் சாதியைச் துச்சமென மதித்து அவருடன் கதாநாயகியாக நடித்தவர் கே.பி. ஜானகி.[**] *விஸ்வநாததாஸ் ஜில்லா போர்டு தேர்தலுக்கு நின்றபோது தனது நகையை விற்று டெபாசிட் கட்டிய கேபி. ஜானகி, கடல் கடந்தும் (சிங்கப்பூர், மலேசியா, பர்மா) சென்று விஸ்வநாததாசுடன் கதாநாயகியாக நடித்தார். அவரைப் போன்றே பிராமண குலத்தைச் சேர்ந்த முத்துலட்சுமி அம்மையார், எஸ்.ஆர். கமலம், திருச்சி காந்திமதி, நெல்லை கிருஷ்ணவேணி போன்ற நடிகையர்களும் விஸ்வநாததாசின் மேடைகளில் உடன் நடித்தவர்களாவர்.*

---

* பாஸ்கரதாசன், இசை ஞானப் பேரொளி பத்மஸ்ரீ கே.பி. சுந்தராம்பாள், சென்னை 2008, ப. 53.

** சி.பெ. சீனிவாசன், தமிழகக் கம்யூனிஸ்ட் வீரர்கள் பகுதி–2, மறைமலைநகர், 2006, ப. 316.

34 வருடங்கள் – 29 முறை சிறைவாசம்

அஞ்சா நெஞ்சன் விஸ்வநாததாஸின் கலைப்பணியும், தேசப் பணியும் 34 வருடங்கள்; அந்த வருடங்களில் 29 முறை சிறை சென்றார். சொத்து சுகம் அத்தனையும் இழந்தார்.

ஆர்.வி. பட்டி குடியிருப்பு

1937-இல் மதுரை ஆர்.வி.மில் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வசதி வேண்டிப் போராடிய பசும்பொன் தேவர் திருமகனார், மதுரை வைத்தியநாத அய்யர், மட்டப் பாறை வெங்கட்ராமய்யர் ஆகியோருடன் சேர்ந்து வெற்றி பெற்று தொழிலாளர்களுக்காக ஆர்.வி. பட்டி குடியிருப்பை ஏற்படுத்தித் தந்த விஸ்வநாததாஸின் திருமங்கல வீடு 2500 ரூபாய்க்கு ஏலத்திற்குப் போகும் நிலை ஏற்பட்டது. (பின்னர் ஏலம் போன விஸ்வநாததாஸின் வீடு இப்போது நினைவுச் சின்னமாக மாற்றப்பட்டுள்ளது)

கொள்கைச் சிங்கம்

வாங்கிய கடன்களுக்காக இவரது வீடு ஜப்தி செய்யப்பட்டு ஏலத்திற்கு நாள் குறிக்கப்பட்டுவிட்ட இச்சூழலில் சென்னையில் 1940-ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் இராயல் அரங்கத்தில் விஸ்வதாததாசின் ஐந்து நாடகங்களுக்கு ஏற்பாடாகியிருந்தது. இதில் வரும் வருமானங்களைக் கொண்டு ஏலத்திற்கு வரும் தனது வீட்டை மீட்டுவிடலாம் என்ற உறுதியான எண்ணம் தாசுக்கு ஏற்பட்டது.

சென்னைக்கு வந்த விஸ்வநாததாஸ் பழைய வண்ணாரப்பேட்டையில் தோமாஸ் என்ற பிரபலமான கோணி வியாபாரி வீட்டில் தங்கியிருந்தார். அங்கேதான் விஸ்வநாததாஸின் இரண்டாவது தங்கையான செந்தியம்மாள் அவரது கணவர் சாண்டோ நாகலிங்கம் பிள்ளையுடன் வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில் இரண்டாவது உலகப்போர் நிதிக்காக ஆங்கிலேயருக்குச் சாதகமாக நாடகங்களை நடத்தித் தந்தால் இவருக்கு ஏற்பட்டுள்ள கடன்களையெல்லாம் அடைத்துவிட்டு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவிப் பணம் அளிப்பதாக அப்போதைய சென்னை கவர்னராக இருந்த எர்ஸ்கின்துரை சென்னைக்கு வந்திருந்த விஸ்வநாததாசுக்குத் தகவல் அனுப்பினார்.

திரு. ராஜாராம் நாயுடு, திரு. நித்தியானந்த அடிகளார் போன்ற சில காங்கிரஸ் தலைவர்கள் கவர்னரின் வேண்டுகோளை

ஆதரித்தனர். நாடகம் நடித்துக் கொடுக்கவும் இவரைக் கேட்டுக் கொண்டனர்.

ஆங்கிலப் பணம் அற்பம்

ஆனாலும் இக்கோரிக்கைக்கு விஸ்வநாததாஸ் இணங்கவே இல்லை. '**தமிழன் கஷ்டகாலத்திலும் கை ஏந்த மாட்டான். இவ்வாறு பணம் கொடுத்து என் தேசிய உணர்ச்சியை மழுங்கடித்துவிட முடியாது. ஆங்கிலப் பணம் எனக்கு அற்பமானது**' என மறுத்து விட்டார்.

உடல் நலமின்றிச் சென்னைக்கு வந்த விஸ்வநாததாஸ் சென்னை இராயல் தியேட்டரில் முதல் மூன்று நாடகங்களில் நடிக்க முடியவில்லை.

1940-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி இரவு வள்ளி திருமணம் நாடகத்தில் விஸ்வநாததாஸ் வேலன் வேடம் - விருத்தன் வேடங்களில் நடிப்பார் என்று விளம்பரப்படுத்தியிருந்தார்கள். நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. புரட்சிகரமான பாடல்களைக் கேட்கலாமென்று பொது மக்கள் பெருமளவில் கூடினர். நாடக அரங்கம் நிரம்பி வழிந்தது. பாடின உடனே கை செய்துவிட வேண்டுமென்று காவலரும் விழிப்புடன் தயாராயிருந்தனர்.

சென்னை ராயல் தியேட்டர்

சென்னை கால்ட் குவார்ட்டர்ஸ் இராயல் தியேட்டர் (யானைக் கவுனிப் பகுதியில் இந்த அரங்கு முன்பு இருந்தது) 2500 பேர் அமரக்கூடிய வசதி மிக்க அரங்கம் இது.

பாடிப் பறந்த தீரன்

இந்த அரங்கில் நாடகம் தொடங்கியது. எடுத்தவுடனே கழுகாசலக் காட்சி; அழகிய முருகனாக மயிலாசனத்தில் விஸ்வநாததாஸ் அமர்ந்திருக்கும் பொலிவுமிகு தோற்றத்தைக் காட்டித் திரைச் சீலை உயர்ந்தது. மயில் மீதமர்ந்து முருகக் கடவுளாகத் தோற்றம் தந்த விஸ்வநாததாஸ் '**மாயா பிரபஞ்சத்திலே**' என்ற பல்லவியைத் தனது மணிக்குரலால் பாடத் தொடங்கினார்.

இவருடைய குரலைக் கேட்டவுடனேயே மக்கள் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர். காவலர்களோ என்ன பாடுகிறார் என்பதைக் கவனிக்கத் தங்கள் காதுகளைத் தீட்டிக் கொள்கின்றனர்.

மயில் வாகனத்தின் மீதமர்ந்து கையில் வேலுடன் பாடத் தொடங்கிய போதே இவரால் தொடர்ந்து பாட முடியாமல் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. தலை கொஞ்சம் கொஞ்சமாகச் சாய்வதைக் கண்டு மேடையில் ஆர்மோனியம் வாசித்துக் கொண்டிருந்த தம்பி சண்முகதாஸ் சட்டென்று எழுந்து வந்து இவரைத் தாங்கிப் பிடித்தார். பேச்சு மூச்சின்றி இருந்த விஸ்வநாததாசை நாடக மேடையிலே படுக்க வைத்தனர். நாடகம் பார்க்க வந்த கூட்டத்தினர் கூக்குரலிட்டனர்.

நாடகம் பார்க்க வந்தவர்களில் ஒரு டாக்டர் மேடைக்கு விரைந்து சென்று விஸ்வநாததாசைப் பரிசோதித்தார். 'விஸ்வநாததாஸ் இறந்து விட்டார்' எனச் சோகத்தோடு கூறினார். அனைவருமே சோகத்தில் மூழ்கினர். விஸ்வநாததாசின் மரணச் செய்தி சென்னை நகரமெங்கும் பரவியது.

நாடகத்திற்காகச் சென்னை வந்து சேர்ந்த பிறகு திருமங்கலத்திற்கும் தனது குடும்பத்திற்கும் ஒரு கடிதம் எழுதியிருந்தார் விஸ்வநாததாஸ். அதில், 'என்னைப் பற்றித் தவறாக ஏதாவது தந்தியோ செய்தியோ வந்தால் நம்ப வேண்டாம்' என்று குறிப்பிட்டிருந்தார். அதனால், அவர் இறந்து விட்டார் என்ற செய்தியை வீட்டிலிருந்தோர் நம்பவில்லை.

நாடகம் முடிந்த மறுநாளே நாடக அரங்கத்தைப் பிரித்துவிட வேண்டுமென்று சென்னை மாநகராட்சி உத்தரவிட்டிருந்தது. தாசின் மரணச் செய்தி கேட்டு அதிர்ந்து போன நீதிக்கட்சி மேயரான வாசுதேவ் 'அந்திமச் சடங்குகள் முடியும் வரை அரங்கைப் பிரிக்க வேண்டாம்' என்று மறு உத்திரவு போட்டார்.

மயில் வாகனத்தில் இறுதிப் பயணம்

அந்த அரங்கத்தின் உரிமையாளரான கன்னையா உடையார் 'இனிமேல் அந்த அரங்கில் எந்தக் கலை நிகழ்ச்சியும் நடக்காது; தியாகி விஸ்வநாததாசின் நிகழ்ச்சியே கடைசியாக இருக்கட்டும்' என்று அறிவித்தார். 1941-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியன்று பிற்பகல் 3 மணியளவில் எந்த மயில் மீது முருகன் வேடத்தில் அமர்ந்து உயிர் நீத்தாரோ அதே மயில் வாகனத்தில் விஸ்வநாததாசின் இறுதிப் பயணம் தொடங்கியது.

இசையரசி கேபி. சுந்தராம்பாள், விஸ்வநாததாசின் திருவுடல் மீது ரத்தினக் கம்பளம் போர்த்தினார். கலைஞர்களும் பல்வேறு அரசியல் பிரமுகர்களும் மக்களும் அத்தியாக சீலனுக்கு மலர் மாலை சூட்டி வணங்கினர்.

ஏழு மணி நேரம்

பெருந்தலைவர் காமராசரின் அரசியல் குரு தீரர் சத்தியமூர்த்தி, கே.பி. சுந்தராம்பாள்,* சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம்,** அனந்த நாராயண அய்யர் போன்ற மேதைகள் இறுதி யாத்திரையில் கலந்து சிறப்பித்தனர். இறுதி யாத்திரையின் போது சென்னை நகரப் போக்குவரத்து 7 மணிநேரம் ஸ்தம்பித்துப் போனதாகப் பாரதி கலைஞர் எஸ்.வி. சகஸ்ரநாமம் தெரிவிக்கிறார். பல நூறு நடிக நடிகையர்களும் பொது மக்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

முருகப் பெருமானின் உற்சவ உலாபோல் இராயல் அரங்கிலிருந்து புறப்பட்ட அந்த இறுதி ஊர்வலம் யானை கவுனி, சைனா பஜார், சௌகார்பேட்டை தங்கசாலை, வழியாக இரவு 7 மணிக்கு மூலக் கொத்தளம் மயானத்தை அடைந்தது. விஸ்வநாததாசின் மூத்த மகன் சுப்பிரம்ணிய தாஸ் சிதைக்குத் தீ மூட்டினார். அங்கு இரங்கற் கூட்டம் நடைபெற்றது.***

ஈமச்சடங்குகள் அனைத்தும் சென்னையிலேயே நடைபெற்றன. மூத்தமகன் சுப்பிரமணியதாசும் அவரது தம்பி சண்முகதாசும் அங்கிருந்து இறுதிச் சடங்குகளை நடத்தி வைத்தார்கள். திருமங்கலத்திலிருந்து குடும்பத்தினர் எவரும் சென்னை போகவில்லை.****

திருமங்கலம் தாலுகா தீரர்கள்

இந்திய சுதந்திரப் போரில் எஸ்.எஸ். விஸ்வநாததாஸோடு தோளோடு தோள் நின்று திருமங்கலம் வட்டாரத்தில் பணியாற்றிய தீரர்களின் பெயர்களை இங்கு நினைவு கூறுவோம்.

புலி மீனாட்சி சுந்தரம் – வெள்ளையத்தா ராவுத்தர்

திருமங்கலம் ஜி. வெங்கடாத்திரி நாயுடு, நித்தியானந்த அடிகள், புலி மீனாட்சி சுந்தரம், K. ராஜாராம், செல்லச்சாமி, கதிர்வேல், சுவாமி ஹம்ஸா, டெயிலர் ஜெகனாதன், சுப்பு, ராமசுப்பு,

---

* காங்கிரஸ் நூற்றாண்டு மலர், சென்னை, 1985, ப. 264, மற்றும் அருணகிரி விடுதலைப் போரில் தமிழ் இலக்கியம், சென்னை, 1993, ப. 523.

** ஆறு. அழகப்பன், தமிழ் நாடகம் தோற்றமும் வளர்ச்சியும், அண்ணாமலை நகர், 1987, ப. 531.

*** கவிஞர் மதிமாறன், முற்கூறிய நூல், பக். 24, 25.

**** மு. செல்லப்பன், முற்கூறிய நூல், ப. 36.

காந்தி அழகப்பன், ப. காவேரி ரெட்டியார், வரதராஜன், சைலப்பன், ரத்தினம்மாள், பொன்னுச்சாமி செட்டியார், கிருஷ்ணா ராவ், வெள்ளையத்தா ராவுத்தர், K. முருகேசம்பிள்ளை, நாகுபிள்ளை, முருகேசன், குருசாமிபிள்ளை, கழுவன், குருசாமித் தேவர், பேச்சிமுத்து பிள்ளை, துரைச்சாமிபிள்ளை, மாணிக்கம்.

காதர்மொய்தீன் – நயினா ராவுத்தர் – இப்ராஹிம்

சின்னையாத் தேவர், துரைச்சாமித் தேவர், ஆறுமுகத் தேவர், சொக்கலிங்கத் தேவர், மதுரகவி ரெட்டியார், காதர் மொய்தீன், நயினா ராவுத்தர், ராமகிருஷ்ணன், டாக்டர் ராமச்சந்திர ரெட்டியார், கோவிந்த ராஜுலு, நாராயணசாமி நாயுடு, சுப்புக் கோனார், ராமச்சந்திர ரெட்டியார், நாராயண ரெட்டியார், அ. கோபால கிருஷ்ணன், S. தினகரசாமித் தேவர், இப்ராஹிம் . . . திருமங்கலம் தாலுகாவில் சுதந்திரப் போர்க்களத்தில் பங்கேற்ற தீரர்கள் ஏராளம். ஏராளம்.

தீரர் விஸ்வநாததாஸின் வாரிசுகள்

விஸ்வநாததாஸுக்கு ஐந்து மக்கள்.

சுப்பிரமணியதாஸ்

விஸ்வநாததாஸின் மூத்த மகன் சுப்பிரமணியதாஸ்; தந்தையின் மரணத்துக்குப் பிறகு தூத்துக்குடி மில் தொழிலாளர் சங்கக் கட்டடத்தில் சில மாணவர்களுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுத்து வந்தார். இதில் போதிய வருமானம் கிடைக்கவில்லை.

தந்தையின் மரணம் ஏற்படுத்திய வறுமை வாழ்க்கையை நினைத்து நினைத்து மனம் நொந்து ஒருநாள் இரவு படுத்த படுக்கையிலேயே மரணமாகிக் கிடந்தார்.

அவரது மனைவி கண்ணம்மா (வயது 80) தூத்துக்குடி பொன் சுப்பையா நகரில் இருநூறு ரூபாய் வாடகை வீட்டில் தன்னுடைய இளைய மகனோடு வசித்தார்.

பிச்சம்மாள்

மூத்தமகள் பிச்சம்மாள் (வயது 76) தூத்துக்குடி பிரையன்ட் நகர் 5-ஆம் தெருவில் முன்னூறு ரூபாய் வாடகை வீட்டில் தனது பேத்தியுடன் குடியிருந்தார். தந்தை வசதியோடு வாழ்ந்த காலத்தில் இவருக்குத் திருமணம். இவரது கணவர் தூத்துக்குடி ஆர்.வி.மில்லில் வேலை பார்த்து வந்தார். மூத்த மகள் மீது அன்பை

கொட்டிய விஸ்வநாததாஸ் தன் மகளுக்குத் திருமணத்தின்போது 40 பவுன் நகை போட்டிருக்கிறார். தந்தை இறந்தபோது இவருக்கு வயது 21.

பழைய காலப் பெருமைகளைச் சுமந்தவாறே கண்ணீர் மல்க தந்தை நாட்டுக்காற்றிய சேவையை நினைத்துப் பெருமை கொள்கிறார். தந்தையை மலர்களால் அர்ச்சித்து வணங்கியவர்.

காசிநாதன்

தூத்துக்குடி கீழச்சண்முகபுரம் பிராப்பர் தெருவில் மூன்றாவது மகன் காசிநாதன் வாடகை வீட்டில் பல ஆண்டுகளாக வசித்து வந்தார். தந்தை இறந்த போது இவருக்கு வயது பதினான்கோ, பதினைந்தோ தான். தூத்துக்குடி ஆர்.வி. மில்லில் 1942 முதல் தொழிலாளியாக வேலை பார்த்த இவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மறைந்துவிட்டார். அவர் வசித்து வந்த அதே வாடகை வீட்டில் மனைவி பாப்பாத்தி அம்மாள், மகன் காசி விஸ்வநாதன் அவரது மனைவி இராசேசுவரி தற்போது இருந்து வருகின்றர்.

தங்கத்தாய்

விஸ்வநாததாஸின் இளைய மகள் தங்கத்தாய். இவரது கணவர் வடிவேல் ஒரு தியேட்டரில் இரவுக் காவலராகப் பணியாற்றுகிறார். பழைய நாடக நடிகர். தூத்துக்குடியில் நைனார் ஆசாரிவிளை மேற்குத் தெருவில் 350 ரூபாய் வாடகை வீட்டில் குடியிருந்தார். இவரும் இவரது கணவரும் சேவாதளத் தொண்டர்களாகப் பணியாற்றியுள்ளார்.

முத்தையாதாஸ்

விஸ்வநாததாஸின் இளைய மகன் முத்தையாதாஸ். சாத்தூரில் கடிகார ரிப்பேர் தொழில் செய்து வந்தார். இவருக்கு 3 பையன்கள், 4 பெண்கள். மிகுந்த வறுமை நிலையில் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தவர்.

வ.ரா. புகழாரம்

மறுமலர்ச்சித் தமிழ் உரைநடையின் முதல்வரும், சமுதாயக் கவலை கொண்ட எழுத்தாளருமான ‘அக்கிரகாரத்து அதிசயப் பிறவி’ என்று அறிஞர் அண்ணாவால் வர்ணிக்கப்பட்டவர் வரா. (வ. ராமசாமி) **‘இணையில்லாத கலைத்தொண்டர்கள்’** என்று விசுவநாததாஸ், கிட்டப்பா, செல்லப்பா போன்ற நாடகக்கலை

முன்னோடிகளின் சிறப்புக்களை வ.ரா. சுட்டிக் காட்டுகிறார்.* விசுவநாததாஸ் வரா. குறித்து எழுதியுள்ள வைர வரிகள் இதோ ...

புயல் காற்று விஸ்வநாததாஸ்

“இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொருவருடைய பெயர் நினைவுக்கு வருகிறது. அவர்தான் விசுவநாததாஸ். இவரைப் பாமர மக்கள் எப்படிக் கொண்டாடினார்கள்! பாமர ஜனங்கள் இவரைக் கொண்டாடக் கொண்டாட, அரசாங்கத்தார் இவர் பேரில் அடுத்து அடுத்து 144 செக்ஷன் பாணப்பிரயோகம் செய்தே வந்தார்கள். இவர் பாடிய ‘கொக்கு பறக்குதடி பாப்பா’ என்ற பாட்டுக்கு எத்தனை தரம், ‘ஒன்ஸ்மோர்!’ - சொல்லி முடியாது. ‘கதர்க் கப்பல் கொடி தோணுதே’ என்று கம்பீரமாகத் தாஸ் பாடும்பொழுது, ஜனங்கள் பரவசமடைந்து போவார்கள், அவர்களுடைய உடம்பு புல்லரித்துப் போய்விடும்.

விசுவநாததாஸ் பிறவி சுதந்திரப் பிரியர்; இவர் அகஸ்மாத்தாக நாடக மேடையிலே ஏறினார். இவரது சுதந்திர ஆவல் முற்றுப் பெறும் முன்னரே, இவர் அதே மேடையில் இறந்தார். இவருடைய சரிதம் வீரன் கலைஞன் ஆன சரிதமாகும். விசுவநாததாஸ் சர்க்காருக்கு, பக்கத்துக்குப் பத்து முள்ளாகக் குத்துவதைப் போல நடந்து கொண்டு தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்ததில் அவருடைய மனோரதம் ஒரு வகையாகப் பூர்த்தியாகியிருக்கலாம். தாஸின் வாழ்க்கை ஆரம்பம் முதல் முடிவு வரையில் போராட்ட வாழ்க்கை; நிம்மதியில்லாத வாழ்க்கை. எனவே நாடக மேடையிலே அவர் திடீர் மரணம் அடைந்தது அவரது சுபாவத்துக்கு அல்லது அவரது விருப்பத்துக்கு ஏற்றதாக இருக்கலாம் என்றுகூடச் சொல்லலாம். வீரனது முடிவைத்தான் விஸ்வநாததாஸ் வேண்டி நின்றார். அது அவருக்குக் கிடைத்தது.

இன்றைக்கும் என் கண்முன், அடிக்கடி தோன்றி மறைகிறார். தாஸின் தண்ணீர்ச் சாவடி என்று ஒன்றை அமைப்பதுதான் விஸ்வநாததாசின் சுதந்திர தாகத்துக்கு அறிகுறியாக இருக்கும். ஏழை மக்களின் உள்ளத்தைக் குளிரவும் குவியவும் செய்த இவர்களுக்கு என்னதான் செய்யக் கூடாது?**

---

* சிட்டி, பெ.சு. மணி, அதிசயப்பிறவி, வ.ரா. கோயம்புத்தூர், 1999, ப. 237

** ‘தினமணி’யில் வ.ரா. கட்டுரைகளாக எழுதினார். அது 1947–இல் ‘கலையும் கலை வளர்ச்சியும்’ என்ற நூலாக வெளிவந்தது. பின்னர் ‘கலை என்பது என்ன?’ எனும் தலைப்பில் வெளிந்த நூல், பக். 41, 42.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் புகழ்மாலை

வீரத் தியாகி விஸ்வநாததாஸ் பற்றி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடிய பாடல் இதோ ...

கொக்குப்ப றக்குதடி பாப்பா என்று
கொடுத்தஅடி ஆங்கிலனைத் துடிக்க வைத்து
மக்களையும் எழுப்பிற்று விசுவ நாத
தாசென்னும் பாவாணன் வரைந்த பாட்டு!
வைக்கோலைத் தின்னுகின்ற மாடும் அன்னோன்
வாய்ப்பாட்டில் சொக்கிவிடும்; நடிப்பில் வல்லோன்;
தெற்கிலும்ஓர் நடிகமணி இருந்தான் என்று
செப்பிற்று வடநாடும் அந்த நாளில்
செக்கெல்லாம் சிவலிங்கம் என்னும் காணாச்
சிறுநாய்போல் ஆங்கிலவர் விசுவ நாத
மக்கள்கவிக் குச்சிறையும் தந்தார் ஆனால்
மகிழ்ச்சியுடன் வரவேற்றார் அதையும் தாசர்;
கொக்குப்ப றக்குதடி என்றார் பின்னும்
கொடிக்கப்பல் தோணுதே எனத்தொ டர்ந்தார்.
திக்கற்ற தமிழர்க்கு நாட்டின் அன்பு
சேர்விசுவ நாததாசென் னும்பேர் வாழ்க
இறந்தநாள் என்னுமொரு பழங்க ணக்கில்
எழுந்ததுதான் இந்நாளின் புதிய வாழ்வு
மறப்பதும்உண் டோவிசுவ நாதர் பேரை?
மறந்திட்டால் கலையுணர்வு வாழ்வ துண்டோ?
சிறந்திருக்க வேண்டுமெனில் அன்னார் கீர்த்தி
செழித்திருக்க வேண்டுமவர் குடும்பம் நன்றே
அறம்செய்வோம் செய்நன்றி மறக்க மாட்டோம்
ஆண்டுதொறும் நினைவுவிழா நடக்க வேண்டும்

– புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

காணிக்கை

டாக்டர் M.S.அருணாசலம்
தோற்றம்: 17.05.1910 மறைவு: 04.12.1969

Dr. A. குமரேசன் @ அப்பு
மலர்ந்தது: 06.07.1946 உதிர்ந்தது: 28.03.2005

பாளையங்கோட்டை

சொர்ண மெடிக்கல் ஹால்

நிறுவனருக்கும், அவர்களது
மூத்த புதல்வருக்கும்....